பதிவு எண 2041

மகாதமா காந்தி வாழ்க

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணு / வெளி நாடு 1½ அணு






| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்

[illegible]

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு புரட்டாசிமீ 30 உ (16—10—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 25



## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் துட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று வகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும் உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி



இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும தோச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஓர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.



13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

## 'ஆனந்த போதினி'.

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினாங்கு, சிங்கபூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனும்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்



Photo Hand Camera.



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிருமம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# $ 500 இனும்! $ 500 இனும்!!

சதானந்த யோகீஸ்வரருடைய

## மகா வீரியவிருத்தி லேகியத்தை

சாப்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (டிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

### ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பலவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது.

இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், அரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூத வியாதிகளை போக்கி சுறுசுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும். இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.



#### உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. செட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோல் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
சூ. லாஸரஸ் பண்டிதன்.
ஸ்ரீமத் T. R. மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான். ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75.

பிராஞ்ச் ஆபீஸ்:— 17, சைனா ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்தரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது


## மரூஉ மொழிப் பிரயோகம் வாபஸ்.

தென்னிந்திய சைவ நூற் பதிப்புக்கழக "செந்தமிழ்ச்செல்வி" வெளியீட்டில் 'சான்றூர்' என்பதன மரூஉ மொழியாய் உலக வழக்கில் உள்ள 'சாணூர்' என்ற சொல் சில இடங்களில் வருவது பற்றி 2-10-27-ல் வெளியான 'குடி அரசு' 12-ம் பக்கத்தில் 'மரூஉ மொழிப் பிரயோகம்' என்ற தலைப்பின் கீழ், அந்த "மரூஉ மொழி இழிவாக எண்ணப்படுதலால் அதனை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று திருவாளர் சிவஞானபுரம் ஆ. மக்கள பாண்டிய நாடார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள், "கல்வி கேள்விகளால் நிரம்பியவர் அன்றூர் என்ற ஆதிபினர்" என்ற இரு பொருள் குறிக்கும் [illegible] மரூஉ மொழியான "சான்றூர்" போலன்றிச் 'சாணூர்' [illegible] பதுகற்கேற்கவே புணர்ச்சி [illegible] இழிந்த பொருள் விளங்குவதாயிருப்பது பற்றி அதனை முன்னமேயே பலபதி வேறெது குறித்தும் வழங்கினேனில்லை. சான்றூர் குலத்தினரை இழிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் எப்போதும் இல்லேனாதலால் அவர்கள் விரும்புகிறபடியே, அந்த 'மரூஉ மொழியை வாபஸ்' வாங்கிக்கொள்ளுகிறேன்.

இனி வெளிப்படும் பகுதிகளில் 'சாணூர்' என்ற சொல் வந்தால் அது வருமிடமெல்லாவற்றினும் 'சான்றூர்' என்று திருத்திப் பதிப்பிக்கும்படி "செந்தமிழ்ச் செல்வி" பத்திராதிபர்களுக்கு எழுதியிருக்கின்றேன்.

வெ. ப. சுப்ரமணிய முதலியார்

---

## மருத்துவர் சங்கம்.

8-10-27 சனிக்கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை தங்கசாலைத் தெரு 221 ஆம் எண்ணுள்ள மருத்துவர் சங்க நிலயத்தில் மருத்துவர்களின் பொதுக் கூட்டம் ஒன்று ஆனரரி பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் திருவாளர் சுதரிசன முதலியார் அவர்களின் அவைத்தலைமையில் கூடிற்று. அவ்வமயம் கீழ் வரும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

1. சென்னையில் புகழ்பெற்ற சித்தவைத்தியரும் மருத்துவர் சங்கத்துணைத்தலைவருமாகிய வி. சக்கரவர்த்தி பண்டிதரவர்களின் மரணத்தால் இக்கூட்டத்தார் வருந்துவதாகவும், மதுரையில் நடைபெற்ற மருத்துவர் இரண்டாவது மகாநாட்டின் தீர்மானத்தின்படி 45 மருத்துவ தலைவர்களுக்கு பிள்ளைப்பேறு பார்த்தல், குழந்தை வளர்த்தல் முதலியவைகளைக் கற்பிக்க முன் வந்ததற்காக வந்தனமளிப்பதாகவும், அதைப்போல் சென்னை நகர்க்காப்பு கழகத்தினர்களும் செய்யவேண்டுமென இச்சங்கத்தினர் கேட்டுக்கொள்ளுவதாகவும், [illegible] மருத்துவிகளை மருத்துவிகள் என்ற பெயரால் அழைத்தல் வேண்டுமெனவும் மருத்துவ வகுப்பினர் காங்கிரசில் சேரும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின பின்னர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களால் வந்தனத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

# கீதையை எல்லாரும் படிக்கப்படாதாம் சமஸ்கிருத பாஷையும் அர்த்தமாகாதாம்.

(கைவல்ய சாமியார் எழுதினது)

சாஸ்திரிகள் கூட்டத்தில் புரோபஸர் சுந்தரராமய்யர் "கீதையை எல்லாரும் படியுங்கள்' என்று மகாத்மா காந்தி சொல்லுகிறார். கீதையைப் படிக்க ஆரம்பிக்குமுன்பு நான்கு குணங்கள் வேண்டும். சாஸ்திரப் பிரகாரம் அதைப் படிக்க எல்லோரும் அருகராகிவிட்டதாக கருதப்படவில்லை. இவைகளெல்லாம் நம்மதத்திற்கே தீங்கு விளைவிக்கவும் உலைவைக்கக் கூடியதாகவுமிருக்கிறது" என்று சொன்னதாக சுதேசமித்திரன் சொல்லுவதையும் நாம் சொல்லுவதையும் பார்ப்பனரே குற்றம் சொல்லுகிறார்கள்." என்று பண்டிதர்கள் சொல்வதையும் இந்த இடத்தில் கவனிக்கவேண்டும்.

இதையெல்லாம் கவனிக்காமல் அவர்களிட மூன்னா காரியபயத்தினுலோ மூடபுத்தியின் பழக்கமென்னுகதாலோ எங்கள் மாபில் அவன் கொடுக்கும் பெருமையினுலோ எங்களை குறைகூறுகிறவர்களின் உணர்ச்சியில்லாத தன்மையை நாங்கள் சொல்லாவிட்டாலும், இவர்களும் இவர்களின்பின் சந்ததிகளும் அடிமை நிலைமையிட்டு நீங்குவதற்கு வேண்டியதை சொல்லியே தீரவேண்டியிருக்கிறது. மகாத்மா கீதையை எல்லோரும் படியுங்கள் என்று சொன்னதுதான் சாஸ்திரிகளுக்குப் பிடிக்கவில்லை. பாப்பனர்களுக்குத்தான் அதைப் படிக்க அதிகாரம் உண்டு என்று சொல்லியிருந்தால் சாஸ்திரிகளுக்குக் கோபம் வராது. சி. ராஜகோபாலாச்சாரியார் அதி ஜாக்கிரதையுடையவராயிருந்தும் இதில் சிறிது முன் ஆலோசனை எடுத்துக்கொள்ள மறந்துபோய் விட்டார். கீதையை எல்லோரும் படியுங்கள் என்று சொல்லுவதோடு பூர்வீகப் புரோகிதக் கருத்தையும் விடாதிர்களென்று மகாத்மாவிடம் சொல்லச் சொல்லியிருந்தால் சாஸ்திரிகளுக்கு மகாத்மாவிடம் கோபம் வராது. கீதை சொன்னவர் கிருஷ்ணன். அவர் ஜாதியில் யாதவர். தொழில் க்ஷத்திரியத்தொழில். பிறவி விஷ்ணு அவதாரம். இவர் சொன்ன சாஸ்திரத்தை எல்லோரும் படிப்பதற்கு அதிகாரமில்லையென்று சொல்லும் வஞ்சனை எவ்வளவு கொடுமையானது என்பதை எல்லாரும் அறியுங்கள். இந்த வஞ்சனையை எடுத்துச் சொல்லுகிறவர்களை "வகுப்பு வேற்றுமை பாப்பார துவேஷிகள்" என்றும் அவன் பக்கனின்று சொல்லும் ஞாயம் தெரியாத அறிவற்றவர்கள் அடிமைப்பட்டது போதாமல் அவர்கள் சந்ததிகளும் அடிமைப்படாமலிருக்க நாங்கள் சொல்லுவதைக் கவனியுங்கள். கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரம். எங்கும் வியாபித்திருக்கும் பொருள் எதுவோ அது விஷ்ணு. விஷ்ணு இந்துமதக் கடவுள் என்பவர்கள் கடவுள் சொன்னதை எல்லாருக்கும் படிக்க அதிகாரமில்லையென்று சொல்லுவது ஞாயத்திற்கு விரோதமான அக்கிரமம். கிருஷ்ணன் சொன்ன கீதை ஒரு கூட்டத்தாரின் அப்பன் சொத்துமல்ல, தாயாதி பாகத்தில் வந்தத் தனிச்சொத்துமல்ல. எல்லாருக்கும் பொது. கீதை அநேக பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லா தேசத்திலும் படிக்கிறார்கள். மிலேச்ச ஜாதி என்று சொல்லப்படும் அன்னிபெசண்டு, கர்னல் ஆல்காட்டு கீதை படித்து அந்த கீதையை பாப்பாருக்கு உபதேசித்து, பாப்பார ஐக்கோர்ட் ஜட்ஜுகளும் வக்கில்களும் அவர்கட்கு சிஷியராயிருக்கிறார்களென்றால நம் நாட்டில் கீதையைப் படிக்கப்படாது என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? கீதை வேதமல்ல, வேதசாரத்தின் சாரம். இதையே படிக்கப்படாதென்று இந்த நூற்றாண்டில் சொல்லுவதாயிருந்தால் இந்த சாஸ்திரிகளும் அவர்கள் கூட்டமும் இதற்கு முன்னமே ஜன சமூகங்களின் அறிவைக் கெடுக்க எத்தனை கொடுமைகள் செய்திருக்கவேண்டுமென்பதை நம்மில் பணமிருந்தும் படித்தும் சாஸ்திரமென்னும் புரட்டுக்கு தலைக்காட்டி பாப்பானின் பாதத்தில் விழுகிறவர்கள் உணரட்டும். கீதை படிப்பதற்கு நாலு குணங்கள் இருக்கவேண்டுமென்கிறார்கள். இன்ன குணமிருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. சாஸ்திரிகள் கீதை படித்திருப்பார்கள் இவர்களிடமிருக்கும் விசேட குணம் நானென்ன? பெண்ஜாதித்து காம் கண்டு நாக்கு வரண்டு தண்ணி தண்ணி என்று கதறினுல் தொட்டால் தீட்டுப் பட்டுவிடுமே என்று "அங்கிருக்கும் தண்ணியை எடுத்துக் குடித்துக்கொள், பக்கத்து வீட்டுபாட்டி விடிந்து வருவதாகச் சொல்லியிருக்கிறாள்" என்பதா முதற்குணம். காலையிலெழுந்து காப்பியும் உப்புமாவும் வயிறு நிறைய தின்றுவிட்டு மடியுடுத்தி நெற்றியில் பட்டையிட்டு யாரையும் தொடமாட்டேனென்று நினைத்து எங்கு வைதீகத்தை நுழைத்தால் வரும்படி வருமென்று கொத்துப் பார்ப்போமோ இருப்பதா இரண்டாவது குணம். ஐந்து வயதில் தலி கட்டி அது அறுத்து அதை மண்டையாக்கி மொட்டையடித்து பண்ணுதை கீர்த்திக்கும் பழிப் பகீர்த்திக்கும் ஆளாக்குகிறீர்கள். பத்து வயதில் கல்யாணம் பண்ணி பதினுறு வயதில் பிள்ளைபெற்று அந்தப் பிள்ளை சீமைப் பெருச்சாளிபோல் அழகாயிருந்தாலும் காரியத்திற்கு உபயோகப்படுகிறதில்லை. தாயும் பிள்ளையும் வியாதியினுல் அழிந்து போகிறார்கள். அப்படிப் பட்ட வந்தபின் கலியாணம் செய்யுங்களென்று சொன்னுல் அது சாஸ்திரத்தில் இடமில்லையென்று சொல்ல பழைய ஏட்டின் மூலைமுடுக்குகளை தேடிக் கொண்டிருப்பதா மூன்றாவது குணம். தீண்டாமை கூடாது, தீண்டாமை இருந்தெவரையிலும் இந்துமதம் தலையெடுக்காது, புனிதமான நான் எல்லாப் பெரியவர்களும் சொல்லுகையில் தாங்களும் தங்கள் கூட்டத்தார்களும் பஞ்சமரை இழுக்குதலைப் பண்ணினுலும் தங்கள் ஜாதிக்கு இல்லாத வழக்கங்களை அனுசரித்தாலும் அதனுல் ஜாதிக்கோ சாஸ்திரத்திற்கோ தப்பில்லை. ஜன சமூகமோ தேசமோ எக்கேடு கெட்டாலும் தங்கள் வயிறு நிறைப்பதே கருத்தாகக்கொண்டு தங்கள் ஜாதியே பெரிதென்ற கொள்கையை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்கு கற்பிக்கச் செய்யும் முயற்சி தடைபடாமலிருக்க தீண்டாமை சாஸ்திரத்திற்கு விரோதமல்லவென்று சொல்லி இந்து சாஸ்திரங்களின் யோக்கியதையைக் கெடுப்பதா நான்காவது குணம். சாஸ்திரிகளுக்கு இதைவிட யோக்யதையான குணம் என்ன வருகின்றன என்பதைக் கவனித்துப் பாருங்கள். இந்த வைதீக சாஸ்திரப் பாப்பான் சொல்லுவதை உங்களுக்கு முன்னுல் எந்தப் பாப்பானும் தவறென்றே சொல்லுவார்கள். ஆனுல் காங்கிரஸ் பாப்பானே சுயராஜ்யப் பாப்பானே மற்றப் பாப்பானே இயக்கத்தைத் தாங்குவதாக அபிநயித்து உங்களை அடிமையாக்கும் சுதேசமித்திரப் பாப்பானே முன்னுல் நின்று கண்டிக்கிறார்களா? அப்படி கண்டிக்க எவனுவது ஒரு பாப்பான் தப்பித் தவறிப் புறப்பட்டாலும் முக்கியமானதை விட்டுவிட்டு எடுக்கிற விஷயமொன்று சொல்லுகிறது மற்றொன்று. ஞாயம் பொருந்தினுலும் பொருந்தாவிட்டாலும் விவகாரத்தைக் குழப்பி அவன் காரியக் கொள்கைக்கு அனுகூலமாகத் திருப்பிச் சொல்லிவிடுவார்கள். அதில் வெட்கமாவது பயமாவது அவர்கட்குக் கிடையாது. இந்த மனுஷத்தனமான ஏமாற்று அவர்கட்கு பரம்பரைப் பழக்கம். அவன் சொல்லுவதைக் கேட்கத்தான் நம் புத்தி பழகியிருக்கிறதே ஒழிய அவன் நம்மை ஏமாற்றிவிட்டு அவன் கூட்டத்தில் சூத்திரனுக்குப் புத்தி ஏது என்று சொல்லி அலட்சியப்படுத்துவதற்கு வெட்கப்படுவதுமில்லை. வைதீகப் பண்டிதர்களைக் கண்டித்து 'சுதேசமித்திரன்' எப்பொழுதாவது ஒரு தலையங்கம் எழுதினதுண்டா? வைதீகக் கொடுமைகளையும் புரோகிதப் புரட்டுகளையும் எந்தப் பத்திரிகை தாங்குகிறதோ அந்தப் பத்திரிகைக்கு நீங்கள் கொடுக்கும் பணம் உங்களுக்குப் பாவமாக வந்தே தீரும். அதையே படித்தால் உங்கள் சந்ததிகளின் உயிர் தேய்ந்து காலின்கீழ் மாய்ந்துகொண்டேயிருக்கும். உங்களுக்கிருக்கும் அரைவயிறு சோற்றுல் இது அநேகருக்குத் தோன்றுவதில்லை. இதற்கு முன்னும் அநேக உத்தமர்கள் உங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். உங்கள் முன்னோர்களும் நீங்களும் காது கொடுத்தீர்கள். புத்தியால் வாங்கிக்கொள்ளவில்லை. இப்பொழுது நாங்களும் சொல்லுகிறோம் உங்கள் புத்தியில ஆராய்ச்சி செய்து பாருங்கள். ஆராய்ச்சியிலுண்டானதை அனுபோகப் படுத்துங்கள். பாப்பாரை விலக்கவும் அவர்களைப் பகைக்கவும் நாங்கள் சொல்லவில்லை. எங்கள் எண்ணமும் அதுவல்ல. அவர்கள் சாஸ்திரமென்றும் அதைப் படிக்கக்கூடாதென்றும் வஞ்சித்து நம்மவர்களை ஒன்றுக்குதவாத காரிகைகளைச் செய்யத்தான் ஒப்பொருளை வீணுக்கி அவனுடைய கூட்டம் க்ஷேமமடைய உங்களையே கருவியாக உபயோகித்து பின் உங்களையே அலட்சியப் படுத்துகிறார்களோ அதற்கு இடம் கொடுக்காதீர்களென்று தான் சொல்லுகிறோம்.

பண்டிதத் தலைவருக்கு புரோபசர் என்கிற பட்டமிருப்பதாகத் தெரிகிறது. இந்த இங்கிலீஷ் பண்டிதப் பெயர் நம்பவர் எழுதின பகவத் கீதையைப் படிக்க பார்ப்பனரிடமுள்ள நாலு குணம் வேண்டும். இங்கிலீஷ் சாஸ்திரம் படித்து பிரொபசர் என்கிற பெயர் வாங்குவதற்கு வெள்ளைக்காரர்களின் குணமும், நடக்கையும் இந்த சுந்தரராமய்யருக்கு என்ன இருந்தது? தனக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்திரங்களைப் பிறர் அனுபவியமல் தடுக்கப் பாப்பார் செய்யும் அக்கிரமம் அந்நாட்டில் இல்லை. சாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டி மானுஷிகத்தை அவமானப் படுத்தும் கொடுமை அவர்களுக்கில்லை. உலகத்திலுள்ள எல்லா மதங்களும், எல்லா பாஷைகளும் செயற்கையின் விதியையும், உலக அமைப்பின் அறிவையும் அடைய திறந்து வைக்கப் பட்டிருக்கிறது. அதை நம் அறிவால் கண்டு செய்கையில் பயன் படுத்தலாம். எத்தனைக்கெத்தனை அந்த அறிவை நாம் ஸ்வீகரிக்கிறோமோ அத்தனைக்கத்தனை நமது பாதையில் உள்ள தடைகள் நீங்குமென்று எல்லாப் பெரியவர்களும் சொல்லுகிறார்கள். மற்ற தேசங்களில் இந்த உண்மை மாய மந்திர இருளில் மறைந்து கிடக்கவில்லை. திறந்த வெளியில் எல்லாரும் காணும்படி தானும் வளர்ந்து பிறரும் வளரும்படி செய்கிறது. உலகமெல்லாம் அப்படி இருந்தாலும் நம் தெய்வங்களும், சாஸ்திரங்களும், பாஷையும் பார்ப்பனனுக்குத்தான் சொந்தம் என்று அவனும் சொல்லுகிறான். நாமும் நம்புகிறோம். தெய்வத்தைக் கும்பிடவும், அவன் உத்தரவுதான் வேண்டும். அவன் தவிர நம் நாட்டில் இந்து சாஸ்திரங்கள் படித்தால் உலகமே முழுசப் போய்விடும், அர்த்தமும் ஆகாதாம். இந்த சுபாவமுடைய நாட்டை வர்ணிக்க மிஸ்மேயோவைப் போன்றவர்கள் என் வரமாட்டார்கள். சமஸ்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

## ஆச்சாரியாரை யார் வரிவாங்குபவரோ? என்ற கட்டுரையின் மறுப்புக்கு பரிகாரங்கள்.

சென்றவாரம் நாம, ஆச்சாரியார் வரிவாங்குபவரா? என்ற தலையங்கமிட்டு பிரசுரித்ததைக் குறித்து ஸ்ரீமான் உ. வெ. இரங்கநாததாததாச்சாரியாரவர்கள் எழுதிய "குரு இகழ்ச்சி குலமழியும்" என்னும் கட்டுரைக்கு, இவ்வாரம் பதிலெழுதுவதாகச் சென்றவாரமெழுதியிருந்தோம் அது பின்வருமாறு,

ஆச்சார் அவர்கள் 'அச்சாரியன்' என்ற சப்தத்திற்கு சில சப்த அர்த்தங்களும் விரிவுரையும் எழுதுகிறதில் "சாஸ்திரங்களைக் கற்று உணர்ந்து தானும் அனுஷ்டித்து அதைப் பிறரையும் அனுஷ்டிக்கச் செய்கிறவன் எவனோ அவனேதான் ஆச்சாரியன்" என்கிறார் அத்தோடு 'குரு' என்பதற்கு "அந்தகாரத்தை நிவர்த்திக்கிறவன்" என்கிறார்

இவ்விரண்டு பிரமாணங்களிலும் இன்ன ஜாதியார்தான் அதற்குரித்தானவர் என்று சொல்லப்படாமலிருக்கும்போழுது இவரே "சூத்திரன் ஆச்சாரியனுவதற்கு பிரமாணம் காட்டமுடியுமா" என்கிறார். இவர் காட்டிய ஆச்சாரிய குரு சப்தங்களிலேயே இன்ன ஜாதியார்தான் தகுதியுடையவரென்று இருந்தால் பதப்பொருளிலே விளங்கியிருக்கலாமே அப்படியில்லாமலிருந்தால் துடிப்பதேன்? எந்த நம்மைப் பிரமாணம் காட்டுவாரா என்கிறார். எப்படியெனில் பிராமண குரு பரம்பரையிலேயே சூத்திரரான நம்மாழ்வாரிடத்திலே மதுரகவிகளும் நாதமுனிகளும் ஆச்ரயித்திருக்கிறதாக இவர் காட்டுகிற குரு பரம்பரையே சொல்லுகிறது. ஆழ்வாரை ஆச்ரயித்து வருணத்திரண்டு பேர்களை இருவர்களை முதல் வருணத்தினரென்றும் அந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, சூத்திரரான நம்மாழ்வாரது திருவடிஸ்தானத்தில் பிராமண சந்நியாசியான உடையவரை வைக்கப்பட்டிருக்கிறது. அதே உடையவரே தம்முடைய சரீரத்தை வேடுவ குலத்தில் பிறந்த வில்லிதாசர் என்பவருடைய ஸ்பரிசத்தினாலே சுத்தமாக்கிக் கொண்டாரென்றும், இதே ராமானுஜருடைய ஆச்சார்யரான பெரியநம்பிகளான பிராமணோத்தமர் ஒரு பள்ளா குலத்தில் பிறந்த மாறனேர் நம்பிக்கு உத்தரக்ரியை முதலானவை செய்தாரென்றும், அதே குருபரம்பரையில் சொல்லப்பட்டிருக்க, ஆச்சாரியார் இவைகளை அறிந்தே கேட்டாரா அறியாமல் கேட்டாரா. ஆயினும் குரு பரம்பரைகளைச் சொல்லிவருகிறவர்களில் கத்திலே பெரிய பெருமாள் பெரிய பிராட்டிக்கும், பெரிய பிராட்டியார் சேனை முதலியாருக்கும், சேனை முதலியார் நம்மாழ்வாருக்கும், நம்மாழ்வார் நாதமுனிகளுக்கும் உபதேசித்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் இதைப்போன்று மற்ற பரம்பரைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை இந்த ஆச்சாரியார் அறியாரா?

ஆச்சாரியார் காட்டின விளாஞ்சோலைப் பிள்ளை அவர்கள் அருளிச்செய்த சப்தகாதையின் முதல் பாட்டான "அமபொன் அரங்கர்க்கும் ..........." என்ற பாட்டிலும், மணவாளமாமுனிகள் சாதித்த "ஞானமனுட்டான ..........." என்னும் பாட்டிலும் ஆச்சாரிய ஸ்தானத்திற்கு பார்ப்பனரே உரியவரென்று குறிக்கப்பட்டிருக்கிறதாகக் காட்டுவாரா? ஒருகால் தாம் டகலையைச் சார்ந்தவர் ஆனையால் வடமொழியில்கண்ட பிரமாணங்கள்தான் தேவையென்று சொல்லுவாரானால் அந்த வடமொழி நூல்களுக்குக் கர்த்தாக்களான இந்த ஆச்சாரியாரது மூலபுருஷராகச் சொல்லிக்கொள்ளப்படும் ரிஷிகள் என்போர் எல்லோரையும் பிராமண ஜாதியில் பிறந்தவர்களாகத்தான் இவர் கொள்ளுகிறாரா? இவைகளெல்லாம் ஆச்சாரிய ஸ்தானத்திற்கு யச்சாதியாராலும் தன்மைதான் வேண்டுமென்று காட்டவில்லையா?

தவிர, "ஆச்சாரியர்கள் தரித்திரராகவே இருக்கவேண்டுமா" என்று இவர் கேட்கிறார். ஆச்சார்ய சப்தத்திற்கும் குரு சப்தத்திற்கும் ஞானத்தையும் அனுட்டானத்தையும், தன்மையையும் பிரதானமாகக் காட்டுகிறதேயல்லாமல், பணத்தைப்பற்றிச் சிறிதும் சொல்லவேயில்லை. மேற்படி இரண்டு பதங்களுக்கும் மேற்படி ஞான அனுட்டான தன்மைகள் இல்லாதவர்கள் பணத்தை முன்விட்டு மேற்படி யோக்கியதைகளை ஸ்தாபித்துக் கொள்ளலாமென்பது இவர்கள் கருத்துப்போலும். எனெனில் ஆச்சாரியனுக்கு சிஷ்யனுடைய ஆத்மோஜ்ஜீவனத்திலேயே தான், இவன் மனம் செல்லவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய இவருக்கு அதிகாரி விஷயங்களில் ஒன்றும் இவர் ஞாபகத்திற்கு வரவேயில்லை. இதை எம்பெருமானார் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின காலத்தில் தொகுத்த 74 சிம்மாசனாதிபதியவர்களுக்கும் மற்ற சிஷ்யர்களுக்கும் உபதேசித்த 82 வார்த்தைகளில் "தேகயாத்திரை கர்மாதீனம் ஆத்மயாத்திரை ஈஸ்வராதீனம் களாய் வேண்டாமிரே காரந்தானுமாகில் நாஸ்திகனுமித்தனை" என்று அருளிச்செய்திருக்கிறபோது இவர் சிஷ்ய கோடிகளிடத்தில் பணத்தண்டச் சொல்லப்பட்டிருக்கிறதா? இன்னும் விவரிக்கிற் பெருகும்

இனி கோடி, கந்தாடை, அபிப பதங்களை ஆராய்வோம். கோடி என்பது கோடியென்ற பெயர்கொண்ட பெண்ணாயிருந்தாலும், அல்லது ரத்தின வியாபாரிகள் வழங்குகிற 20 ஐக்குறிக்கும் கோடியாயிருந்தாலும், அல்லது இவர் சொல்லுகிற கோடியாயிருந்தாலும், பலனைப்பொருத்தச் செய்தாரா நிஷ்காமியமாகச் செய்தாரா அல்லது பாரையும் பிரம்ம ஞானத்துக்குப் போகாதபடி கோடி சம்சாரிகளையுண்டுபண்ணி அதில் பிறக்கும் சந்ததியாரை தமக்கு அடிமைகளாக்கி தமக்கு வருஷா வருஷம் கப்பம் கட்டி வரும்படியாகச் செய்தாரா என்பதைப் பற்றி இவர் ஒன்றும் சொல்லவில்லை.

இன்னும் கோடி கன்னிகாதானம் தாத்தாச்சார் சில எண்ணிறந்த காடுகளை ஆண்டு வந்தாரென்றும் சொல்லுகிறார். அது எதற்கென்பது நமக்கு விரித்துக் காட்டவில்லை. தவிர எண்ணிறந்த கோவில்களுக்கு கைங்கர்யங்கள் செய்ததாகவும் காணப்படுகிறது.

இவரே ஆசாரியருக்குக் கொடுப்பது பாகவத ததியாராதனம் என்றும், அத்திருமேனிகளே தான நடமாடுந் தெய்வங்கள் என்றும் மற்றொரு பக்கத்தில் சொல்லியிருப்பதற்கு பகவான் சரீரங்களில் கோயில் கொண்டெழுந்திருக்கிறார் என்றுஞ் சொல்லியிருக்கிறார். அப்படியானால் அக்கோடி கன்னிகாதான தாத்தாசார் தினம் 1-க்கு எத்தனை சரீரங்களை போஷித்து வந்தார், வருகிறார், வருவார், என்பதற்கு இவர் யாதொரு உதாரணமும் சொல்லாமல் பார்ப்பனருக்கு மட்டும் உபயோகப்படும்படியான கோயில் கன்னிகாதானங்களையே சொல்லிக் காட்டினர். இவைகளினாலேயாவது தமக்கு சர்வ பிராணிகளிடத்தில் இருக்கும் காருண்யம் புலப்படவில்லையா?

"இவர் பின்னும் அர்த்தபஞ்சகாகஸ்ய ஞானங்களைப் போதிக்கத் தயாராயிருக்கிறோம், அதை அடைபவர் உண்டா" என்கிறார். இது நெயக்குடத்துக்கு எறும்பு வருமா என்று கேட்கிறது போலிருக்கிறது. எனெனில் கடப்பாரையை ஆயுதமாக உபயோகிக்குமிவரிடத்தில் அர்த்த பஞ்சக ஞானம் இருக்கிறதென்று யார் கொள்ள முடியும்? ஆனால் இவர் இரும்புமட்டக்கோல் என்கிறார், மற்றவர் கடப்பாரையென்கிறார் மனிதனைத் துன்புறுத்துவதற்கு எதுவாயினும் போதுமென்பதை இவர் அறியாரா?

இவர் பின்னும் அர்த்த காமபரர்களாய், பாஷண்டிகளாய், நாஸ்திகாச்சிரேசர்களாய், இந்திரியப்ரீதியே மோக்ஷமென்று கிடக்கிற நீங்கள் ஆத்மக்கியானத்துக்கு அருகர்களா" என்கிறார்.

அர்த்தகாமபரர்களாக உள்ளோராக யார் வருஷா வருஷம் ஒருவர் நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட சம்பாதித்த முதலுக்கு திரிகிறார்கள்?

சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளை அறிந்திருந்தும் தமக்கு வேண்டியபடி பொருள் செய்து கொண்டு நடப்பவர்களை பாஷண்டிகள் என்பார்கள். இதில் சாஸ்திரங்களைத் தெரிந்து கொண்டு மாறாக நடப்பவர்களையா, தெரியாமலே ஒழுங்காக நடப்பவர்களையா பாஷண்டியென்பது ஆசாரியரே அறியட்டும்.

மூன்றாவது நாஸ்திகரைக் குறிப்பிட்டிருக்கிறார்; நாஸ்திகரையும் திருத்தலாம், ஆஸ்திகரையும் திருத்தலாம், ஆனால் ஆஸ்திக நாஸ்திகர்களாக நடக்கும், நடந்து வரும் ஆசாரியர்களையார் திருத்துவதென்பதையும் அவரே அறியட்டும். இன்னும் இவர் "குருக்களுடைய சந்நிதியில் வந்த அசேதனமான துரும்புகூட சிஷ்யர்களால் பகுமானிக்கத்தக்கது" என்று சொல்லுகிறார்.

இந்த இடத்தில் முன் சொன்ன குரு ஆசாரிய சப்தங்களுக்கு உரித்தானவர்களு

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# வர்ணாசிரமமும் காந்தியடிகளும்.

புரட்டாசி மாதம் 11 தேதி (27-9-27) அன்று பகல் 2-40 முதல் 5-10 மணிவரை பாகனேரியில், காந்தியடிகளிடம் நான் வருணாசிரம அநீதிகளைப்பற்றிப் பேசிய சம்பாஷணையை கீழே தருகிறேன். அவைகளை மொழிபெயர்த்தவர் ஸ்ரீமான் எஸ். இராமநாதன். அந்த உடனிருந்தோர் ஸ்ரீமான்களான மகாதேவ தேசாய், தேவதாஸ் காந்தி, டாக்டர் ராஜன், ஸ்வாமி ஆத்மாராம், மு. காசிநாதன் செட்டியார், ராய சொக்கலிங்கன், அரு. சோமசுந்தரம், வ. ராமசாமி அய்யங்கார் முதலிய பலர் ஆவர்.

## நமது கேள்விகளும் அடிகளின் விடைகளும்.

கேள்வி:—தமிழர்கள் மதம் தெரியுமா?

விடை:—சிறிது கேள்விப்பட்டிருக்கிறேன்.

கே:—அம்மதத்தில் ஜாதிப் பிரிவுகள் இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

வி:—ஜாதிப்பிரிவு அதில் கிடையாது என்றே தோன்றுகிறது.

கே:—திருக்குறளைப் படித்திருக்கிறீர்களா?

வி:—ஆம்.

கே:—அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

வி:—சந்தேகமின்றி அது ஒரு இந்து மதத்தைச் சார்ந்த நூலே. அது சாஸ்திரங்களுக்கு விரோதமானதுமல்ல.

கே:—உங்கள் வருணாசிரம வியாக்கியானப்படி பிறப்பினால் ஜாதிப் பிரிவு உண்டா?

வி:—உண்டு; ஆனால் உயர்வு தாழ்வு ஓர் சிறிதும் இல்லை.

கே:—திருக்குறளில் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனக் கூறியிருப்பதற்குத் தங்களுடைய பொருளென்ன?

வி:—வருணாசிரமக் கொள்கைக்கு நேர் மாறாக இருந்தாலும் அக்கொள்கையை அடியுடன் வேரறுக்கவில்லை கடவுள்முன் எல்லா உயிரும் சமமென்பதையே காட்டுகிறது. ஒரு மனிதன் பிற மனிதனைக் காட்டிலும் உயர்ந்தவனென்று சொல்லுவது மனிதத்தன்மாகா தென்றே கூறுவேன்.

கே:—வருணாசிரம மென்பது என்ன?

வி:—அது பாரமார்த்திகச் சிக்கலைக்காட்டும் ஓர் உலகப் பொது விதியாகும் ஆனால் உயர்வு தாழ்வுக்கும் இந்த தருமத்திற்கும் சம்பந்த மில்லை. சாப்பாடு, விவாகம், தீண்டாமை ஆகிய எவையும் வருணாசிரமத்தைப் பாதிக்கமாட்டா. தொன்று தொட்டு வந்த இந்த விதி உங்களுடையவும், என்னுடையவுமான முதியோர்களால் கண்டுபிடிக்கப் பட்டது. அவ்விதி மனித வாழ்க்கையைத் தூய்மைப் படுத்த ஓர் வழிகாட்டியாகும். மேல் நாட்டாரும், இஸ்லாம் மதக்காரரும் கூட கண்டிப்பாக அவ்விதியையே பின் பற்றுகிறார்கள் என்று சொல்வேன். அவர்களுள்ளும் பிரிவுகள் உண்டு.

கே:—வருணாசிரம விதிப்படி சூத்திரருக்கு விதிக்கபபட்ட சட்டங்கள் சரியா?

வி:— மனுஸ்மிருதியில் கூறியிருப்பது சரியன்று. கீதையில் கூறியிருப்பது சரி

கே:—மனுஸ்மிருதியைத் தாங்கள் முழுமையும் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? ஸ்மிருதிகளைப்பற்றி பொதுவாகத் தங்கள் அபிப்பிராயமென்ன?

வி:—மனுஸ்மிருதியில் ஓர் அளவு உண்மையும், பல புரட்டுகளும் இருக்கின்றன ஒவ்வொரு சாஸ்திரத்தையும் ஸ்மிருதியையும் உண்மையென்ற அளவு கோலால் அளந்து, உண்மைக்கு விரோதமாகப் படுபவைகளைத் தள்ளிவிட வேண்டும் ஆனால் நான் ஏக தேசம்தான் ஸ்மிருதிகளை ஆதாரமாகக்கொள்வேன். பகவத் கீதைதான் எனக்கு எப்பொழுதும் ஆதாரமாகும். எந்த நூலில் உண்மை இருந்தாலும் அதை ஆதாரமாக எடுத்துக் காட்ட தயங்கமாட்டேன். ஸ்மிருதிகள் ஓர் காலத்தில் ஒரு மனிதனால் எழுதப்பெற்றவையல்ல பல மனிதர் பல வேறு காலங்களில் அநுபவத்தில் கண்டவைகளையும் அவரவர் இஷ்டப்படியும் எழுதப்பெற்றன.

கே:—பகவத்கீதையை முழுவதும் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

வி:—ஆம், அது குறிப்பிட்ட வழியில் நடக்கவேண்டுமென்றதுவும் கூறவில்லை. சில பேருரைகள் அதில பொதிந்துகிடக்கின்றன.

கே:—பகவத்கீதையில் குணத்திலும், பிறப்பிலும், வருணம நிச்சயிக்கலாம, என்று குறிப்பிட்டிருப்பது பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

வி:—ஆம, அதற்குத்தக்க விதிப்படி சிலர் குணத்தினாலும், காமாவினாலும் வருணம் நிச்சயிக்கலாம என்பதை நான் மறுக்கிறேன். வருணம என்பது பிறவியின் காரணத்தினாலேயே தான் நிச்சயிக்கப் படுகிறது. குண கர்மங்கள் மூதாதைகளின் வழியாக அவர்கள் சந்ததியாருக்குப் பரவுகின்றன.

கே:—வருணங்கள் நான்கிலும் உயர்வு தாழ்வு என்று சொல்லும் பொழுது எந்த வழியிலும் பிராமணன் உயர்ந்தவன் எனச சொலலலாமா?

வி:—கூடாது.

கே:—கலப்பு மணம் கூடுமா?

வி:—கூடும. ஆனால், எல்லா வருணத்தோரும பிராமணப்பெண்ணை விரும்பினால் ஜனத்தொகைக குறைவினால் பெண் கிடைக்க வழியில்லை.

கே:—கலப்பு மணததில் பிறந்த பிள்ளைகட்கு வருண விதி என்ன?

வி:—தகபபனுடைய வருணம் தான்.

கே:—கூலி பெற்று கோயில் பூஜை செய்வோரும், வக்கீல வேலை பார்பபோரும், வைத்தியத் தொழில் செய்வோரும், கவர்ன்மென்டில் சேவகா விர்த்தி செயவோரும, அன்னிய மதத்தினர் கிருஸ்தவர், துருக்கர், இடத்தில் வேலைபார்ப்போரும், இழிவான தொழில் செய்வோரும ஆகிய பிராமணா என்று சொலலிக கொள்பவாகள் உங்கள் வருணாசிரம விதிப்படி பிராமணரா?

வி:—அவாகள பிறப்பினால் பிராமண வருபபினால் பிறநதாலும் கருமததினால் பஞ்சமாகி விட்டனா

கே:— அவர்களைப்பஞ்சமர்கள் என்று சொலலலாமா?

வி:— எப்பேருடன் வேண்டுமானாலும் அழைக்கலாம். பஞ்சமர் என்ற வார்த்தை இக்காலததில் தீணடததகாதோராய் பாவிக்கப்படுவதால், தீண்டாதோர் எனப்படுவோரை நாம் இது காலை சேர்த்துக்கொள்கிற நிலைமையில் அக்கூட்டத்தைப் பெருகவிடாமலிருப்பதற்காக பதிதர்கள், வருணபிரஷ்டர்கள் என்று அழைக்கலாம்.

கே:— எவர் இம்மாதிரி வேலைகளுக்குப் போகலாம்?

வி:—சூத்திரர்கள் தான். வியாபாரமும்லாபகாமுமான தொழிலும் வைசியனுக்குரியது.

கே:—வருணாசிரமம் ஒழுங்காக நடத்த முடியாத நிலையில் வருணாசிரமம வேண்டாம் என்று பச்சையாய் ஒப்புக்கொள்வதை விட்டு, மென் மேலும், அவ்வார்த்தையை (வருணாசிரமமென்று) உபயோகிப்பது பலசாதிச்சண்டைகளுக்கு இடந்தந்து கொண்டு நிறகிறதே, அப்பேரை அடியுடன ஒழித்து வேறுபேரால் ஏன் அழைக்கக்கூடாது?

வி:— உங்களிஷ்டப்படி தொழில் தர்மம் என்று கூப்பிட்டாலும் எனக்கு எல்லாம ஒன்று தான்.

கே:— அந்த வார்த்தை (வருணாசிரம தர்மம) பல கஷ்டங்களுக்கு இடந்தருகிற பொழுது அதையேன் ஒழிக்கக்கூடாது?

வி:— வார்த்தையின் பெயரை மாற்றுவதால் பிரயோஜன மொன்றுமில்லை.

(ஹிந்து மதம குறைந்து புத்தமதம் இந்தியாவில் பெரும் பாகமாகி வரும் பொழுது சில பிராமணர் புத்தமதத்தினராக மாறி அதில் தலைமை ஸ்தானம் பெற்று அசல் புத்தமதகாத்தாககள் காலஞ்சென்ற பிறகு தலைமை ஸ்தானம வகிதத புத்தராக நடித்த பிராமணர் புத்தமதத்தை இந்து மதமாகத் திரித்து விட்டு புத்தமதத்தை இந்தியாவில் பெரும்பாலும் இல்லாதபடி செய்துவிட்டனர் என்பது சரித்திரவாலாறு.)

கே:— புத்தமதம இந்தியாவை விட்டுத் துரத்தப்பட்டவிதம உங்கட்குத்தெரியுமா?

வி:—தெரியும்; அதில் பிராமணர் நனமையே செய்தனர். அமமதம் துரத்தப்பட்டதற்கு அவர்கள் காரணஸ்தர்களல்ல. புத்தமதத்தில் இருந்த நனமைகளை எல்லாம் ஹிந்து மதத்தில் சேர்த்துவிட்டனர். அதன் காரணமாக இந்தியாவில் நல்ல புததமத தத்துவஙகள் அதிகமாக நிற்கின்றன. அதன் சிறப்பான தத்துவங்கள் இந்தியாவில் ஹிந்து மததத்தோடு சேர்ந்துவிட்டன. பிராமணர் அமமதத்திலுள்ள கெடுதல்களையே துரத்தினர். அவ்வகையில் தீமையைக் காட்டிலும் அதிக நன்மையே செய்தனா.

கே.— வருணாசிரம தர்மத்துக்கு தாங்கள் எப்படி உயர்வு தாழ்வற்ற வியாக்கியானம் செய்தாலும், அவ்வருணாசிரமம் அவசியம் இருந்து தானகவேண்டும் எனச் சொல்வதை நிலை நிறுத்தவே சில பிராமணாகள் புத்தமதத்தினரை ஓட்டின மாதிரியில் உங்களைப்பின்பற்றுவதாக நடிக்கின்றனா என்பது தங்கட்குத் தெரியுமா?

வி:— வெளிவேஷம் போடுகிற அயோக்கியர்கள் என் கூட்டததில் பலர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். மிஸ் மேயோ என்ற அமெரிக்காமாது என் வாத்

தைகளில் சில வற்றை உபயோகப்படுத்திக் கொண்ட மாதிரி அவர்கட்கு வேண்டிய பாகத்தை என் பேச்சிலிருந்து ஆதாரம் எடுத்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யக்கூடும்.

கே:—குருகுல போராட்டத்தின் போது பிராமணர்கள் நடந்து கொண்ட விதம் தவறாகும். அப்பொழுது திருச்சியில் நடந்த சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குருகுல சம்மந்தமான பேச்சு வந்தபொழுது டாக்டர் ராஜன் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியுள்பட அங்கிருந்த ஒரு பிராமணராவது அதை ஆதரிக்கவில்லை. (இதன் குறுக்கே அங்கிருந்த வ. ரா. ராமசாமி அய்யங்கார் நான் ஆதரித்தேன் என்றார். உடனே நாம் இது கூட்டத்தில் நடந்த விஷயம் உமக்கும் இதற்கும் சம்மந்தமில்லையென்று கூறியதும் அடங்கினார்) மேலும், அத்தீர்மானம் நிறைவேறின காரணமாக டாக்டர் ராஜன், ஸ்ரீமான் ராஜகோபாலச்சாரியாரியோர் அவர்கள் வகித்த பதவியை ராஜிநாமச்செய்து விட்டது தங்களுக்குத் தெரியுமா?

உடனே பக்கத்திலிருந்த டாக்டர் ராஜனிடம் மகாத்மா 'ஏன் ராஜிநாமச் செய்தீர்' எனக் கேட்டார்.

டாக்டர் ராஜன் விடை:—காங்கிரஸ் கமிட்டீ கூட்டத்தில் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தின் விஷயங்களைப் பேசுவது சரியல்ல என்ற எண்ணத்துடன் ராஜிநாமச்செய்தோம். ஆனால் நான் அதை (கொள்கையை) ஆக்ஷேபிக்கவுமில்லை, சமபந்திபோஜனம் நான் எப்பொழுதும் செய்துகொண்டு தான் வருகிறேன். தவிர, நான் காங்கிரஸ் அங்கத்தினர் பதவியை ராஜிநாமச் செய்யவில்லை, மாகாணகூட்டத்தின் பதவியையே ராஜிநாமச் செய்தோம்.

மகாத்மா வினா:—சரி நீங்கள் சரியல்லவென நினைக்கும் தீர்மானம் நிறைவேற்றப் படுவதற்காக ராஜிநாமா செய்வானேன்?

டாக்டர் ராஜன் விடை:—அது தவறாக இருக்கலாம்.

மேலும் கே:—தங்களைப் பின்பற்றுவோரில குறிப்பிடத்தகுந்த ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியுள்பட குருகுலப் போராட்டத்தில் தவறாக நடந்ததிலிருந்து பிராமணரை எப்படி நம்பமுடியும்?

வி:—சில பொழுது தவறாக நடப்பது இயல்புதான்.

கே:—தென்னாப்பிரிக்காவிலும் பஞ்சாபிலும் வெள்ளையர் செய்த கொடுமையைக் காட்டிலும் பிராமணரென்போர் பிராமணரல்லாதாரிடம் செய்யும் கொடுமை பெரிதல்லவா?

வி:—ஆஹா! ஆம் அதற்கு இந்து மதத்தையே குற்றம் சாட்டலாம.

கே:—சேரமா தேவியில் குருகுலம் இருந்த இடத்திற்குச் செல்லப்போவதாகக் கிளம்பும் வதந்திக்கு ஆதாரமுண்டாயின் நோக்கமென்ன?

வி:—அங்கு போவதாக உத்தேசமில்லை.

கே:—ராஜீய விஷயங்களில் முன் போல எப்பொழுது முன்னணியில் வந்து வேலை செய்யப் போகிறீர்கள்?

வி:—என்னுடைய சொந்த வழியில் இப்பொழுதும் நான் தீவிரமாக வேலை செய்து கொண்டு தான் வருகிறேன்:

கே:—காங்கிரசைத் தலைமை வகித்து நடத்தப்போவது எப்பொழுது?

வி:—சட்டசபை பிரவேசம் முதலிய கொள்கைகளே மேவி நிற்கும் தற்பொழுதுள்ள காங்கிரசை நான் தலைமை வகித்து நடத்துவதில் என்ன பிரயோஜனம். தேசம் இப்பொழுதிருக்கும் நிலையில் என்னையும் உங்களையும் சட்டசபையில் சேரச் சொல்லுமே யொழிய என்னுடைய கொள்கைகளைப்பெரும்பாலும் பின்பற்ற மாட்டாது. தேச விடுதலைக்கும் என்னுடைய கொள்கைகளை முழுவதும் அவலம்பித்தாலன்றி வேறு வழியில்லையென்றே எண்ணுகிறேன்.

கே:—சட்டசபை பிரவேச கக்ஷியார் வக்கீல்கள் இவர்களுடைய ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரசை விட்டு வேறு ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கலாமா?

வி:—மற்றொரு ஸ்தாபனம் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஜனங்களுக்கு என்னைப் பின்பற்றுவதற்குப் போதியதைரியம் கிடையாது. என்னுடைய எதிர்ப்பை அவர்கள் விரும்பினாலும், என்னுடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்வதில்லை. ஜனங்களிடத்தும் உண்மை உணர்ச்சி பரவினாலொழிய வேறு வழியில்லை, நான் அந்தருணத்தையே ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். வெறுங்கூட்டங்கள் பல கூடி தீர்மானங்கள் செய்வதால் மட்டும் என்ன பயன்?

கே:—தாங்கள் சொல்லுகிறபடி தேச முழுவதும் மக்களுக்கு உணர்ச்சி எப்பொழுதாவது வரும் என்று நினைக்கிறீர்களா?

வி:—எனக்கு கடவுளிடத்தில் அளவு கடந்த நம்பிக்கை உண்டு. சீக்கிரமோ நாள் பட்டோ அவ்வுணர்ச்சி வந்து தான் தீரும். அநேகமாய் என்னுடைய வாழ் நாளிலேயே பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

### அடிகளின் முடிவுரை.

வருணாசிரம தர்மம் என்ற அஸ்திவாரத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் என்னுடைய பிராமணரல்லாத சிநேகிதர்கள் அதைத் தகர்க்க முயற்சி செய்யக்கூடாது. பிராமணர்களாய்ப் பிறந்த எல்லோரையும் நீங்கள் பிராமணர்களெனக் கருதவேண்டாம். உண்மை பிராமணன் தன்னுடைய சாஸ்திர ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும். நல்ல அறிவாளியாயும், உண்மையையே உலகத்தாருக்குப் போதிப்பவனாய் மிருத்தல் வேண்டும். இவ்விதமில்லாதவர்களை நீங்கள் பிராமணர்களெனக் கொள்ளவேண்டாம். வருணாசிரம தர்மம் எனத் தற்பொழுது வழங்கும் பிசாசுடன் சண்டையிடுங்கள் சத்தியாக்கிரகம் செய்யுங்கள். கவர்ன்மெண்டு உதவியை நாடாதீர்கள். நானும் உங்கள் பக்கத்தில் சேர்ந்து போராடுகிறேன்.

கோவில் பிரவேச விஷயம ஒன்றிருக்கிறது. சில பிராமணர்கள் கவர்ன்மெண்டிலிருந்து பட்டாக்கள் பெற்று பூஜை செய்துகொண்டு வருகிறார்கள். பிராமணர்கள் தான் பூஜை செய்ய வேண்டுமென்பதில்லை. படிப்பிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் மேலானவர்களே பூஜை செய்யத்தகுதியுள்ளவர்கள். இக்குணங்கள் பொருந்திய எவ்வருணத்தாலும் பூஜை செய்வித்தல் அவசியம்.

சமபந்தி போஜனம் விஷயமாய் நாம் பிறரைக் கட்டாயப்படுத்தல் கூடாது. இது பற்றி பிறருடன் சண்டையிடுதலும் பிசகு. பிரித்து உணவு என்று தெரிந்த விசேஷ காலங்களுக்கு நீங்கள் போகாமலிருக்கலாம். உங்கள் வீட்டில் விசேஷம் நடக்கும் பொழுது எல்லோரையும் சமமாய் நடத்தலாம்.

கலப்பு விவாகம் கூடாதென்பதல்ல, க்ஷத்திரன் பிராமண வகுப்பில் பெண் எடுக்கலாம். ஆனால் ஜனத்தொகை வெகுகுறைவாக இருக்கும் பிராமணவகுப்பிலும் க்ஷத்திரிய வகுப்பிலும் விவாகம் செய்து கொள்ளப் பிரியப்பட்டால் பெண்கள் கிடைப்பது கஷ்டமாக முடியும். ஒருவருண் ஆசாரம், பழக்கம், வழக்கங்கள் இவைகளுக்கும் மற்றொரு வருணத்திற்கும் வித்தியாசமுண்டு. கூடுமானவரையில் அவ்வவ்வகுப்பிலேயே விவாகம் செய்து கொள்ளுதல் உசிதம்.

தீண்டாமை, மரக்கறி, இறைச்சி சாப்பிடுதல், கதர், இது போன்ற பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நேரமாய் விட்டபடியால் பிறப்பினால் ஜாதி வித்தியாசம் கற்பிக்கும் முறை சரியல்லவென்பதற்கு முன் அநுபவங்களுடனும், மற்றும் அவர்களுடைய விடையில் தோன்றிய பல இடங்களையும் எடுத்துக்காட்டி பேசமுடியவில்லை. கடிதத்தில் எழுதிக் கேட் பாயென்ற முடிவில் விட்டுவிடும்படியாயிற்று. ஆகவே உயர்வு தாழ்வு, மணத்தாலும், கோயில் பிரவேசத்தாலும், உணவாலும் கிடையாதென்பதே அடிகளின் வருணாசிரம தர்ம முடிவு.

வ. பி. சு, ஷண்முகம் செட்டியார்
கானாடுகாத்தான்.

---

### மாணவர் தமிழகம், மன்னார்குடி.

பத்தாவது ஆண்டின் நிறைவு விழா (15, 16—10—27) சனி, ஞாயிறுகளில் மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூல் பிரைமரி ஹாலில் நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ சாமி வாலையானந்தம் அவர்கள் தலைமை வகிக்க அருள் கூர்ந்திருக்கிறார்கள். அக்காலை அரிய சொற்பொழிவுகள் நிகழும். தாங்கள் அனைவரும் எழுந்தருளி விழாவைச் சிறக்க செய்யுமாறு வேண்டுகிறேன்.

மன்னார்குடி, பிரபவ, புரட்டாசி 22. } வி. குருசாமி, காரியதரிசி.

### பிராமணீயம் ஒழிந்த திதி.

பிரபவ வருஷம புரட்டாசி ௴ 14௳ ஆங்கிலம் 25-9 27 ஆகிய ஆதித்த வாரத்தன்று ஈப்போ ஸ்ரீமான் வை. பெ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் பிதுர்களுக்கு பிராமணப் புரோகிதம் அன்றி, மாளய சிரார்த்தம் கொடுத்து சுமார் 100, 120 ஏழை ஜனங்களுக்கும் ஜாதி வித்தியாசமின்றி அறுசுவை பதார்த்தங்களுடன் அன்னம் அளித்து காரியங்களை பூர்த்தி செய்து ஈஸ்வரர் இடமும் பிதுர்க்களிடமும் ஏழை ஜனங்களிடமும் நல்ல திருவருள் பெற்றனர்.

வை. பெ. கோவிந்தசாமிபிள்ளை.

## செங்குந்த சமூகம்

தென் இந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிகளால் நமக்கு அனுப்பி பிரசுரிக்கும்படி வேண்டிக்கொண்ட அச்சங்க நிர்வாக சபை தீர்மானம் ஒன்று இன்று வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதை நாம் பார்த்தால் தென் இந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் என்பவர்கள் ஆயிரம் வருஷம் தூங்கிய அரசர் கதைபோல் காணப்படுகின்றனர். கோயமுத்தூர் ஜில்லாவில் செங்குந்தர் சங்கம் சுமார் 20 வருஷத்திற்குமேல் ஏற்பட்டிருப்பதுடன் அம்மகாநாடுகளுக்கு காஞ்சி சென்னை முதலிய இடங்களில் இருந்து பல கனவான்கள் வந்து அக்கிராசனம் வகித்தும் வந்திருக்கிறார்கள். அச்சங்கத்தார் இவ்விருபது வருஷ காலத்தில் எவ்வளவோ சீர்திருத்தம் செய்து தங்கள் மரபில் இருந்து வந்த சில கெட்ட வழக்கங்களை 100-க்கு 75 பாகம் திருத்தியும் வந்திருக்கிறார்கள். அல்லாமல் கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள செங்குந்த மகாஜனங்கள் என்கிறவர்கள் நேற்று அல்லது முன்தினம் செங்குந்தர் என்கிற பேரை உடையவர்கள் அல்ல. நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட ஆதாரங்களைப் பார்த்தால அதிலிருந்தே அவர்கள் செங்குந்த மரபினர் என்கிற ஆதாரங்களைக் காணலாம். அக்கூட்டத்தாரிடம் இருப்பதாகக் காணப்படும் சில கெட்ட வழக்கங்கள் என்று சொல்லப்படுவதானது, அதாவது பெண்களை விபசாரத்திற்கு பொட்டுக்கட்டி விடுவது என்பது, பணம் சம்பாதிக்கவோ அல்லது விபசாரத்திற்கு ஆசைப்பட்டோ ஏற்படுத்திக்கொண்ட வழக்கம் என்று யாராலும் சொல்ல முடியாது.

இந்துமதம் என்கிற பேராலும் இந்துமதத்தில் உள்ள பல பல கடவுள்கள் பேராலும் நமது நாட்டில் ஏற்பட்ட ஆயிரக்கணக்கான ஆபாசங்களில் இதுவும ஒன்றே அல்லாமல் வேறல்ல. கடவுள் பக்தி, புண்யம, மோக்ஷம் என்பவைகளை நம் நாட்டுப் பாமர மக்களிடம் ஆரியர் புகுத்திய காலத்தில் அதற்காக மக்கள் செய்யவேண்டிய கடமைகள் என்கிற பேரால் அவர்கள் ஏற்படுத்திய அயோக்கியத்தனங்களில் இதுவும் ஒன்றே அல்லாமல் மற்றபடி இன்று கொழுத்ததினால் ஏற்படுத்திக்கொண்ட ஈனத்தொழில் அல்ல வென்பதையும் தென் இந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் என்றும் அறியவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அக்காலத்தில் இந்தக் காரியம் பக்தியின் பரவசத்தால் மோக்ஷத்தின் ஆசையால் ஒரு கூட்டத்தார் ஏற்றுக்கொண்டார்கள். இது மற்றும் சில வகுப்பாரிலும் இருக்கக் காண்கின்றோம். அதற்காக அவர்கள் நம்மவர்கள் அல்ல என்று ஒதுக்கிவிடுவது ஒருக்காலும் நன்மை தரத்தக்கதாகாது.

இப்பொழுது நமது மக்கள் மதம், கடவுள், பக்தி, மோக்ஷம் என்கின்ற பெயர்களால் எவ்வளவோ இழிவான காரியங்கள் செய்கின்றார்கள். எவ்வளவு கேவலமான பார்ப்பனர்களின் காலிலும் விழுகிறார்கள். எவ்வளவு தாழ்மையான பெயரைக்கொண்டிருக்கிறார்கள் என்பவைகளை யோசித்துப் பார்த்தால் இம்மாதிரி யாரும் ஏமாந்து போவது சகஜம் என்பது தெரியாமல் போகாது. கடவுளுக்கு பெண்ஜாதி ஆவது புண்ணியம் என்றும், கடவுள் பக்தர்களுக்கு பெண்ஜாதியாயிருப்பது மோக்ஷம் என்றும், காம அவஸ்தைப் படுகிறவர்களுக்கு அவ்வவஸ்தையை நீக்குவது 32 தர்மங்களில் ஒன்று என்றும், சில அரசர்கள்கூட தங்கள் பெண்ஜாதிகளை பக்தர்களுக்கு கொடுத்தார்களென்றும் சொல்லிவைத்தால் மோக்ஷத்தில் பேராசை இருக்கின்றவர்கள் இக்காரியம் செய்து மோக்ஷம் சம்பாதிக்க ஆசைப்படுவார்களா இல்லையா என்றுதான் கேட்கின்றோம். அதோடு அச்சமூகத்திற்கு எவ்வளவு தூரம் தெய்வபக்தி இருந்திருந்தால் இக்கஷ்டமான காரியத்திற்கு அவர்கள் சம்மதித்து இருக்கவேண்டும். எனவே மதத்தின் பேரால ஏற்பட்ட ஆபாசங்களை உணர்ந்து அவ்வக்கிரமங்கள் இனி நடக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்கு கோவை செங்குந்தர்களை செங்குந்த சமூகம் அல்ல என்று யாராலும் சொல்லமுடியாது. அவர்கள் பெண்களில் ஏதோ சிலர்தான் இக்காரியங்களை ஏற்றுவந்தார்களே ஒழிய அச்சமூகம் முழுவதும் இதில் பிரவேசிக்கவில்லை என்றும், புருஷர்களுக்கு நெசவு தொழிலே வெகு காலமாய் இருந்துவருகிறதென்றும் நாம் தைரியமாய்ச் சொல்லுவோம். தவிர நமது நாட்டு மூட வழக்கம் குருட்டு நம்பிக்கை ஆகிய இக்கொடுமைகளுக்கு நமது செங்குந்த மரபுப் பெண்கள் ஈடுபட்டது போலவே மலையாளத்திலுள்ள நாயர் வகுப்பு பெண்களும் பார்ப்பனர்களுக்கு வைப்பாட்டியாய் இருப்பதில் புண்ணியமுண்டு மோக்ஷமுண்டு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாயர் பிரமுகர்கள் அவைகளை ஒழிக்கப் பாடுபடுகிறார்களே ஒழிய அப்பெண்கள் எங்கள் வகுப்பு அல்ல என்று அவர்கள் சொல்லவே இல்லை. அன்றியும் ஜாதிப் பிரிவுகளும் பிறவியினால் உயர்வு தாழ்வுகளும் இயற்கைக்கும், மனிதத் தன்மைக்கும், அன்புக்கும், சத்தியத்திற்கும், சுயமரியாதைக்கும் விரோதமானது என்று கருதி அவைகளை ஒழிக்கப் போராடிவரும் இக்காலத்தில் இம்மாதிரி உணர்ச்சிகள் அவசியமில்லாததும் பிற்போக்கானது மென்றே சொல்லுவோம்.

"திராவிடன்."

---

## சமத்துவமும் சகோதரத்துவமுமே தான் ராஜீய விடுதலைக்கு வழி.

### தற்காலம் நமக்கு வேண்டியது சமூகப்புரட்சியேயன்றி வேறல்ல.

பாஞ்சால நாட்டு இந்து தலைவரான பாய் பரமானந்தர் சில தினங்களுக்கு முன் கல்கத்தாவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சமூக சீர்திருத்தத்தின் அத்தியாவசியத்தைப்பற்றிக் கூறியதாவது:—

சமத்துவம சகோதரத்துவம் ஆகிய அஸ்திவாரத்தின் மேல் தான் புதிய இந்து தேசியம் கட்டப்படவேண்டுமென்று நான் நம்புகிறேன். அதிலே உயர்ந்தோர், தாழ்ந்தோர், என்ற பேதாபேதங்களெல்லாம் ஒழிந்து படுதல் வேண்டும். பிராமணருக்கும சண்டாளருக்கும் ஒரேவித அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். நமது சமூகத்திலுள்ள எல்லா பேதங்களையும் பிரிவினைகளையும ஈட்டுச் சாம்பராக்கத்தக்க ஒரு புதிய ஒளி வீசுகிற தேசிய ஜ்வாலையை நாம் கொளுத்தி விட்டு அதிலிருந்து பண்டைய அக்கினி குலத்தாரைப்போல ஒரு புதிய தேசகத்தாரை சிருஷ்டிக்கவேண்டும். நான் உங்களுக்கு அமெரிக்காவை ஒரு உதாரணமாய் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல தேசங்களிலுமிருந்து தாழ்ந்த நிலையிலுள்ளவர்களும ஏழைகளுமான ஆண்களுடன் பெண்களும் அமெரிக்காவுக்கு குடியேறிச் செல்லுகின்றனர். உடைகந்தலான, பரியாசகரமான, எளியவனான, கிரேக்கனோ இத்தாலியனோ அல்லது ஐரிஷ்காரனோ அமெரிக்க நாட்டில் போய் கால் மிதித்த உடனேயே காமத்தை ; உடனே அவன் அமெரிக்க ஜனக்கட்டின் ஒரு அங்கத்தினனாகிவிடுகிறான். உடனே நரகலோகத்தை விட்டு எல்லாரும் சமத்துவமாய் வாழுகிற, ஒருவர் உயர்வு ஒருவர் தாழ்வு என்ற பேதமில்லாத ஒரு சுவர்க்கலோகத்திற் பிரவேசித்து விட்டதாக அவனுக்கு உணர்ச்சி தோன்றிவிடுகிறது. அங்கு ஒவ்வொருவரும் எவ்வித உரிமைகளையும் எல்லாவித சிலாக்கியங்களையும் அனுபவிக்க இடங்கொடுக்கப்படுகிறது. வாழ்க்கையில் அதியுன்னத அந்தஸ்துக்கு வருவதற்கும் அந்த எல்லாருக்கும் ஒன்று போலவே சவுகரியங்கள் கிடைக்கிறது. அந்த அமெரிக்கர் நிலைமையையும உங்கள் நிலைமையையும ஒப்பிட்டுப் பாருங்கள். கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட நமது சகோதரருக்கு மனித உரிமைகளில் ஒரு சிறிது விட்டுக்கொடுக்கவும நாம் இன்னும் தயாராயில்லை. இந்த பூலோக முழுவதிலும் இந்துக்களாகிய ஒரு கூட்டத்தார் மாத்திரம் தான் தாங்கள் வாழ்க்கை நிலையின் ஆணிவேரை ஊனப்படுத்தி தங்களின் சுயநாசத்திற்காக வேலை செய்து வருகிறார்கள். ஒரு பெரிய சமூகம் சீர்திருத்தமடைய புரட்சி ஏற்படவேண்டும். அதுதான் தற்காலம் நமக்குவேண்டியது. ஐரோப்பியதேசங்களிலெல்லாம புதியதேசிய உணர்ச்சி தோன்றி வளர்வதற்குமுன் எப்பொழுதுமே இவ்வித சமூகப்புரட்சிகள் ஏற்பட்டுள்ளன இவ்வித சீர் திருத்தத்தின் மூலமாய்த்தான் நமக்கு ராஜீய சாபல்லியம் கிடைக்குமேயொழிய வேறில்லை. சமூக வாழ்க்கையிலே மனித சிந்தனைகளெல்லாம் இடைவெளியின்றி தொடர்ச்சியான நீர் வீழ்ச்சிபோல ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் சமூக வாழ்க்கையிலே நினைவுகளாதீனமும் செயல் சுபாதீனமும் ராஜீய காரியங்களில் நினைவு சுயாதீனத்துக்கு வழி நடத்துகின்றன. ராஜீய தேசிய ஆராய்ச்சிகோட்டையை சுற்றிவருகிற உங்களுக்கு சமூகப் புரட்சியின் அத்தியாவசியத்தை எடுத்துக்கூறினேன். இது போலவே சமூகப் புரட்சி ஏற்பட்டு இந்துக்களுக்குள் சமத்துவ சகோதரத்துவ உணர்ச்சியாவது பரவுமானால் அது நம்மை உண்மை சஜீவ முன்னேற்றத்தில் கொண்டு போய்ச்சேர்க்கும்.

---


## "தமிழன்"

(ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.)

தாழ்த்தப்பட்டவர்

சமத்துவம், சுதந்திரம், முன்னேற்றம்,


இவைகளை அடைய வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் "தமிழனை" வாங்கவேண்டும. தாழ்த்தப்பட்டவர்களாகும் ஆதிதிராவிடர்களின் குறைகளை இடைவிடாமல் கவர்ன்மெண்டாருக்கு விளக்கிக்கூறுவதும் இப்பத்திரிகையேயாகும்.

வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் 3

வெளிநாட்டுக்கு ரூ. 4.

மானேஜர் "தமிழன்" ஆபீஸ்,

ஆண்டர்சன் பேட்டை, கே. ஜி. எப்.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு புரட்டாசி 30உ

## நீல் ஆக்கிரகம்.

சென்னையில் சிலர் சத்தியாக்கிரகம் என்னும் பேரால் நீல்துரை உருவச்சிலையை உடைத்தெறிய வேண்டுமென்று சொல்லிக் கொள்வதை ஒரு பெரும் தேசாபிமானமெனக்கருதி சில வாலிபர்கள் மூலம் போலிக் கிளர்ச்சி ஆரம்பித்து அதற்காக பல வாலிபர்களையும் சிறைக்கு அனுப்பியாய்விட்டது. சில பெண்மணிகளையும் சிறைக்கு அனுப்பியாய்விட்டது. மகாத்மா காந்தியும் இச்சத்தியாக்கிரகத்தை ஆதரித்து ஆசீர்வதித்ததாகவும் வெளிப்படுத்தியாகி விட்டது. வரப்போகும் காங்கிரசிலும் இதை ஒரு பெரிய அகில இந்திய விஷயமாக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. தவிரவும் இதற்குச் சிலர் ரகசியமாய்ப் பணம் கொடுத்தது மகாத்மா கொடுத்ததாகப் பெயர் செய்ய முயற்சிப்பதாகவும் கேள்விப்படுகிறோம்.

இவ்வளவும் உண்மையாகவே நடந்ததாயிருந்தாலும் இதை ஒழுங்கான காரியமென்று ஒருக்காலும் நம்மால் சொல்லமுடியாது. ஒரு சமயம் மகாத்மாவே ஒரு சத்தியாக்கிரகி ஆகவந்து தன் கையால் சம்மட்டி கொண்டு நீல் சிலையை உடைக்க முன்வந்தாலும்கூட இவற்றைத் துராக்கிரகமென்றுதான் சொல்லுவோமே தவிர மகாத்மா செய்கிறார் என்பதற்காக ஒரு காலமும் நாம் இதை சத்தியாக்கிரகமென்று சொல்லமாட்டோம். தற்சமயம் மகாத்மாவின் கொள்கைகள் எப்படி குழப்பமாய்விட்டதோ, அவற்றுள் எப்படி மகாத்மா தன்மையில்லாமல் ராஜதந்திர தன்மை நிறைந்துவிட்டதோ, அதுபோலவேதான் நீல் சத்தியாக்கிரகமென்னும் விஷயத்திலும் மகாத்மாவினுடைய கொள்கை என்பது ஆளுக்குத் தகுந்தபடி வழவழவென்று சொல்லவேண்டியதாகிவிட்டது. இந்த காரியத்தை பார்ப்பனர்களல்லாமல் நம்மைப் போன்றவர்கள் யாராவது ஆரம்பித்திருந்தால் கண்டிப்பாய் அதை துராக்கிரகமென்றே மகாத்மாவும் சொல்லியிருப்பார்.

நாக்பூரில் தெருவில் வாளேந்திக்கொண்டு போனதையே துராக்கிரகமென்று வியாக்யானம் செய்த மகாத்மாவுக்கு, சம்மட்டியெடுத்து ஒரு சிலையை உடைப்பது துராக்கிரகமல்லவென்று தோன்றிவிடுமானால் அதற்கு அப்பீல் எங்கே என்றுதான் நமக்குத் தெரியவில்லை. நீல் துரை அக்கிரமம் செய்தவரா? அயோக்கியரா? என்பதைப் பற்றி நமக்குள் சண்டை வேண்டியதில்லை. அதற்காக அவரது உருவச்சிலையை உடைப்பதில் என்ன அர்த்தமிருக்கின்றது? அயோக்கியர் என்று தோன்றும்படியான மனிதனையெல்லாம் கொன்றுவிடுவதில் ஆக்ஷேபனை இல்லையா என்று கேட்பதுடன் அப்படிக் கொல்லுவது சத்யாக்கிரகமாகுமா என்றும் கேட்கின்றோம். உதாரணமாக வட இந்தியாவில் மகமதிய சகோதரர்கள் ஸ்வாமி சிரத்தானந்தர் முதல் பலரை சுட்டும் குத்தியும் கொல்ல முயற்சித்து இருவர் செத்தாய் விட்டது. இருவர் குற்றுயிராய்க் கிடக்கின்றனர், மற்றும் பலர் காயப்பட்டுக்கிடக்கின்றனர். ஸ்வாமி சிரத்தானந்தரையும் மற்றவர்களையும் நாம் தலைவர்களாயும் மகான்களாயும் கருதுகின்றோம் ஆனாலும் இவர்களைக் கொலைசெய்ய முன்வந்த கொலைபாதகர்களும் அவர்களுக்குப் பின்னாலிருந்துகொண்டு இக்காரியத்திற்கு ஆதரவு கொடுத்துவருபவர்களும், இம்மகான்களை நாம நீல துரையைக் கருதுவதைவிட மோசமாகவே கருதுகிறார்கள் ஆனதினால் அவர்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளையெல்லாம் சத்தியாக்கிரகம் என்று சொல்லிவிடுவதா என்று கேட்கின்றோம். இம்மாதிரி காரியங்களையெல்லாம் சத்தியாக்கிரகம், தேசாபிமானம், மதாபிமானம் என்று கற்பித்துக் கொண்டே போவோமேயானால் இதன் முடிவு எங்குபோய் நிற்குமென்றும் கேட்கின்றோம். இம்முறையில் பார்த்தால் ஸ்வாமி சிரத்தானந்தருக்கு நாம் ஒரு சிலை செய்து வைத்தால், மகமதியர்கள் அதை உடைக்கமுன்வந்தால் அது சத்தியாக்கிரகமா அல்லவா என்றும் கேட்கிறோம். நமக்கு "சுயராஜ்யம் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லுகிறவர்களும், நம்மைக் கொடுமைப்படுத்தி அடக்கி நமது ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கிறவர்களும், தென்னாப்பிரிக்காவில் நம்மவர்களைத் தெருவில் நடக்கவிட மாட்டேன் என்று சொல்லுகிறவர்களுமான வெள்ளைக்காரர்கள் சிலை ஒவ்வொன்றையும் உடைக்கவேண்டியது சத்தியாக்கிரகமாகத் தானே முடியவேண்டியதாகிவிடும். அன்றியும் ஒரு பெரிய சமூகமாகிய நம் தமிழ் மக்களை ஒரு சிறு கூட்டத்தாரான பார்ப்பனர்கள் சூத்திரர்களென்றும், தங்கள் வைப்பாட்டி மக்களென்றும், தீண்டக்கூடாதவர்கள், பேசக்கூடாதவர்கள் தெருவில் நடக்கக்கூடாதவர்கள் என்றும், சூத்திரன் பொருள் வைத்திருக்க அருகனல்லவென்றும், அப்படி மீறிவைத்துக் கொண்டிருந்தால் உதைத்தும் பிடுங்கிக்கொள்ளலாமென்றும், அறிவுக்காக அவன் படித்தால் அவன் நாக்கை அறுத்து விடவேண்டுமென்றும் இன்னும் எவ்வளவோ இழிவாகவும், எழுதிவைத்துக்கொண்டும், சிலவற்றை சட்டத்தின் மூலமாயும் அமுலிலும் வைத்துக்கொண்டிருப்பதை எல்லாம் ஒழிப்பதற்காகச்செய்யும் முயற்சியில் அக்கொடுமைக்கு ஆதாரமானவர்களாகிய ஒவ்வொருவரையும் சம்மட்டிகொண்டடிப்பதையும் அவ்வாதாரங்கள் இருக்குமிடங்களையெல்லாம் நெருப்புவைப்பதையும் சத்தியாக்கிரகமென்றுதானே சொல்லியாகவேண்டும். இவ்வழக்கத்தை நிஜமென்று நம்பியோ, அல்லது இந்த முறையால் பிழைக்கலாமென்று கருதியோ இருந்து கொண்டிருக்கிற பார்ப்பனர்கள் மேற்கண்ட மாதிரி தங்கள் வாழ்வுக்கே கெடுதி ஏற்படும் படி அழிக்கப்பாடுபடுகின்றவர்களை கடப்பாறைகொண்டு அடிப்பதையும் சத்தியாக்கிரகமென்று தானே சொல்லியாகவேண்டும். க்ஷத்திரியவம்சத்தையே கூட்டோடு அழித்து விட்டதாக சொல்லப்படும் பரசுராமன் சிலை எங்கிருந்தாலும் க்ஷத்திரியர் என்று சொல்லிக்கொள்பவர்கள் அதைச் சம்மட்டி கொண்டு உடைத்துத்தானேயாகவேண்டும். நீல் துரையைவிட அதிகமான கொடுமைகள் மகமதியருக்குச் செய்ததாகச் சொல்லப்படும் கதைப்படி சிவாஜி மகாராஜாவின் சிலையை மகமதியர்கள் சம்மட்டியும் கடப்பாறையும் கொண்டு உடைத்துத்தானேயாகவேண்டும். ஒரு 'சூத்திரன்' தபசு செய்ததற்காக அவனை ஒரே பாணத்தில் கொன்றுவிட்ட ஸ்ரீராமன் சிலையை சூத்திரர்கள் எனப்படுபவர்கள் எங்கு கண்டாலும் உடைத்துத்தானே யாகவேண்டும். மதுரையில் 8000 சமணர்களை உயிருடன் கழுவேற்றிய திருஞானசமபந்தமூர்த்தியென்னும் பிராமண பக்தரை நாளைக்கும் சைவ மக்கள் கொண்டாடி உற்சவம் செய்கின்றார்களே. இதைப் பார்த்த சமணர்கள் சம்பந்தமூர்த்தி நாயனார் சிலை எங்கிருந்தாலும் அதை உடைத்துத் தானேயாகவேண்டும். இக்குற்றங்களுக்கும் நீல் துரை குற்றங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் நாம் கற்பித்துவிடமுடியும். இப்படியே பார்ப்போமானால் சத்தியாக்கிரகம் செய்து உடைக்கவேண்டியதற்கு உட்படாமல் எது மீதியாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தப்படி பார்த்தால் சமீபத்தில் சென்னையில் ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் சிலையின் மூக்கை உடைத்து விட்டதையும் கழுத்தை வெட்ட முயற்சித்ததையும் குற்றம் என்று சொல்ல முடியாமல் தானே போய் விடும். இன்னமும் வைப்பதற்காக செய்து தயாராயிருக்கும் சர் பி. தியாகராய செட்டியார், சர். மணி அய்யர் சர். பாஷ்யம் அய்யங்கார் மற்றும் எத்தனையோ சிலைகளை உடைப்பதற்கோ பின்னப்படுத்துவதற்கோ இஷ்டப்படும் ஒவ்வொருவர்களுக்கும் காரணம் கிடைத்துக்கொண்டு தானே இருக்கும். ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி அய்யரின் சிலையை பின்னப்படுத்தியவர்கள் யார் என்பதைப்பற்றி முதல் முதலாக சென்னையில் ஒரு பிரஸ்தாபம் ஏற்பட்டதாகவும், அதாவது யாராவது ஒரு வெள்ளைக்காரர் இம்மாதிரி செய்யப்படுவதற்கு காரணமாய் இருக்கலாம் என்று சொல்லப்பட்டதாய் தெரிகிறது. இது வாஸ்தவமாய் இருந்தால் அதில் யார் என்ன குற்றம் சொல்லக்கூடும். சட்டப்படி குற்றம் ஏற்படலாமே தவிர நீல் சிலை நீதிப்படி குற்றம் சொல்ல இடமெங்கே இருக்கிறது?

ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் கொடுத்த அபிப்பிராயத்தைப் பார்த்தால்- 'பார்ப்பனர்களை பெரிதும் துவேஷிக்கின்ற பார்ப்பனரல்லாத தலைவர்களும் உற்சாக மிகுதியாயுள்ள தங்கள் சிஷ்யர்

களை அளவுக்கு மீறிய காரியம் செய்யவொட்டாமல் அடக்குவார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்' என்று சொல்லி இருக்கிறார். இதைப்போல போக்கியப்பொறுப்பற்ற வார்த்தைக்கடுகளவு அறிவிருக்கின்ற வேறு எந்த மனிதனும் சொல்லி இருக்க முடியாது. ஏனெனில் பார்ப்பனரல்லாத வாலிபர்களே செய்து விட்டார்கள் என்பதாக குறிப்புக்காட்டி பேசி இருக்கிறார். ஆனாலும் நாம் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில் அவருடைய சகாவும் தலைவருமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் அதற்கு நேர்மாறாய்ப் பேசி இருக்கிறார். அதாவது ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யர் சிலையை பின்னப்படுத்தின தினத்திலேயே நீல்துரை சிலையை உடைக்கும் சத்தியாக்கிரகத்தை நிறுத்தப்போகிறதில்லை என்ற குறிப்புகாட்டி பேசியிருக்கிறார்.

இதிலிருந்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் நீல்துரை சிலையின் சொந்தக்காரர்களையே குறி வைத்துப் பேசி இருக்கிறார் என்பதும் யாவரும் உணரக்கூடியதாயிருக்கிறது. மற்றொரு அய்யங்கார் ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் காலத்தில் அய்யங்காரை தலையெடுக்க வொட்டாமல் செய்த காரியம் கொஞ்சமல்லவென்று சொன்னார்.

இம்மாதிரி செய்தவன், வெள்ளைக்காரனாயிருந்தாலும் சரி, பார்ப்பனரல்லாதாராயிருந்தாலும் சரி அய்யங்காராயிருந்தாலும் சரி, வேறு யாராயிருந்தாலும் சரி, நீல் சத்தியாக்கிரக முறைப்படி பார்த்தால் அவன் பயங்காளித்தனமாகவும் திருட்டுத்தனமாகவும், யாருக்கும் தெரியாமல் செய்தது தான் இப்போது பெருங்குற்றமாக கருதப்பட்டு விட்டதே அல்லாமல், ஒருவன் தனக்கோ, தங்களது சமூகத்திற்கோ, கெடுதி இழைத்தவன் என்றோ, தங்களது சுயமரியாதைக்கு விரோதியென்றோ, தங்கள் வகையாரின் சிலையை காப்பதற்கென்றோ கருதிக் கொண்டு வெளிப்படையாய் செய்திருப்பானானால் சட்டப்படி குற்றமாகி ஒருவருஷமோ இரண்டு வருஷமோ அதற்கு மேற்பட்டோ தண்டனை அடைந்திருந்தாலும், அச்செய்கையை சத்தியாக்கிரக மென்றும் தேசாபிமானம் என்றும் செய்தவனை வீரனென்றும் சொல்லப்பட்டு விடுமா அல்லவா? என் கேட்கின்றோம். அதற்காக ஒரு சத்தியாக்கிரகம் ஆரம்பித்து ஒரு 500 ரூ செலவு செய்தால் 50 பேரை ஜெயிலுக்கும் அனுப்ப முடியுமா முடியாதா என்று கேட்கின்றோம். தவிர, இம்மாதிரி ஒவ்வொரு காரியத்தையும் பார்த்து அது சட்டப்படி சரியானாலும் தப்பானாலும் நியாயப்படி தப்பானாலும் சரியானாலும் அந்த விசாரமேயில்லாமல் பொதுவாய் காதில் கேட்ட மாத்திரத்தில் சந்தோஷப்படவும் துக்கப்படவும் ஆதரிக்கவும் கண்டிக்கவும் ஆள்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். அதனாலேயே ஒரு காரியம் சரியா தப்பா என்று மதித்து விடக்கூடாதென்பதே நமது அபிப்பிராயம். இம்மாதிரி துராக்கிரக காரியங்களில் மக்களுக்கு அதிலும் பாமரமக்களுக்கு உணர்ச்சி போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொறுப்புள்ள தலைவர்களுடையவும் பொது மக்களுடையவும் கடமை என்றே சொல்லுவோம். ஒரு மனிதனின் சிலையை அதினுடைய ஒரு கூட்டத்தாரோ பொது ஜனங்களோ அன்பாலும் பக்திவிஸ்வாசத்தினாலும் வைக்கப்பட்ட சிலையை இம்மாதிரி செய்வது என்பது எவ்வளவு பெருமையாகதான் சம்மட்டியைக் கொண்டு பின்னம் செய்வதானாலும் அது பலாத்காரமும் துராக்கிரகமும் என்பதே நமது தீர்மானம். அதிலும் ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் சிலையை பின்னமாக்கினது வெள்ளைக்காரராயிருந்தாலும் பார்ப்பனரல்லாதாராயிருந்தாலும் பார்ப்பனராயிருந்தாலும் வேறு யாராயிருந்தாலும் அது மிகவும் இழிவானதும் முட்டாள்தனமானதும் கோழைத்தனமானதும் மனிதத்தன்மையற்றதுமான காரியம் என்றே சொல்லுவோம்.

## சமாதானம்.

சென்ற வாரம் 'எது வீணான அவதூறு' என்னும் தலையங்க முடிவில், 'மற்ற விஷயங்களைப்பற்றி அடுத்த வாரம் எழுதுகிறோம்' என்று எழுதியிருந்தோம்.

ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் கடிதம் கிடைத்து அவர்களை நேரிலும் பார்த்து பேச நேர்ந்தது. அவைகளில் சம்பாஷணைகளின் தோற்றம் எப்படி இருந்தாலும் அதைப்பார்த்தவுடன் மற்றவர்களுக்கு எப்படி படக்கூடுமோ அந்த உணர்ச்சியோடு கூடி அந்த சம்பாஷணை நடைபெறவில்லை என்று சொன்னார். உதாரணமாக 'ஊழியன்' பத்திரிகையில் கண்ட சம்பாஷணையில் 'பிராமணர்களைக்காட்டிலும் தகுதிபெற்று சுகாவேலை செய்ய முன்வரும் பிராமணரல்லாத தொண்டர்களைத்தான் ஏற்றுக்கொள்ளுவதை முறையாக வைத்திருக்கிறேன்' என்று காணும் வாசகம் அம்மாதிரி கருத்தோடு தான் சொல்லவில்லையென்றும் பிராமணர்களை விட பிராமணரல்லாத தொண்டர்களைத் தான் ஏற்றுக்கொண்டு வந்திருப்பதாகச் சொன்னதாகவும், இனியும் அம்மாதிரி வழக்கத்தையே கையாளப்போவதாகவும் சொன்னார், என இம்மாதிரி இன்னும் சில விஷயங்களையும் குறிப்பிட்டார்.

அன்றியும் முக்கியமான விஷயங்களில் நமது கொள்கைக்கு அவரது உள்ளத்தில் எவ்வித மாறுபாடும் இருப்பதாகக் காணப்படவில்லை யாதலாலும் அதை அவ்வளவோடு நிறுத்திவிட்டோம்.

## "சுதேசமித்திரன்" சமாதானம்.

சமீபத்தில் ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகள் மித்திரனில் பிரசுரமானதில் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயார் அம்மாள் "பேசினார்" என்று பிரசுரமாகிவிட்டதாக அறிந்து வருந்துகிறோம். மிஸ் மேயோவைத்தவிர வேறு எந்த ஸ்திரீகளும் "ஆர்" விகுதி சேர்த்து எழுத மித்திரன் சம்மதப்படவில்லை. நாம் அறியாமல் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வருந்தும்படி எழுதப்பட்டு விட்டதற்கு நாம் வருந்துகிறோம்.

## தமிழ்நாட்டில் சத்தியாக்கிரகம்.

தமிழ் நாட்டில் சுயமரியாதை சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாய் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை முதலியோர்கள் தெரிவித்துக்கொண்டதற்கு இணங்கவும், நாமும் விண்ணப்பித்துக் கொண்டதற்கு இணங்கவும் இதுவரை அநேக ஆதரவுகள் கிடைத்துவந்திருக்கின்றன. அதாவது பலஇடங்களில் 'சூத்திராள்' என்று போடப்பட்டிருந்த விளம்பரங்கள் எடுபட்டு விட்டதாகவும், பல மகாநாடுகளில் சுயமரியாதை சத்தியாக்கிரகத்தை ஆதரித்தும் அதற்கு உதவிசெய்வதாகவும் தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. பல தனிப்பட்ட வாலிபர்களும் பெரியோர்களும் தங்களை சத்தியாக்கிரகிகளாய்ப் பதிந்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டும் தெரிவித்துமிருக்கிறார்கள். சில பிரபுக்கள் தங்களால் கூடிய உதவிசெய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்து இருக்கின்றார்கள். எனவே தக்கபடி பொறுப்புள்ள மக்கள்கூடி யோசித்து அதை எப்பொழுது எங்கு ஆரம்பிப்பது என்பதே இப்பொழுது கேள்வியாயிருக்கின்றது. சமீபத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களும் சென்னையில் இதைப்பற்றி சில கனவான்களிடத்தில் கலந்துபேசப் போவதாகவும் சமீபத்தில் அதாவது 22, 23 தேதிகளில் சென்னையில் நடக்கும் பார்ப்பனரல்லாத வாலிப மகாநாட்டில் யோசிப்பதாகவும் ஒரு கனவானால் கேள்விப்பட்டு மிகுதியும் சந்தோஷப்படுகின்றோம். ஆதலால் அப்படி ஏதாவது ஆலோசித்து முடிவுசெய்ய ஒரு ஆலோசனைக் கூட்டம் கூட்டப்படுமானால் மற்ற வெளியூர்களில் உள்ள பிரமுகர்களும் தொண்டர்களும் அவசியம் வந்து இருந்து வேண்டிய ஆலோசனை சொல்லி உதவிசெய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஒரு படகோட்டி தன்னை தாழ்ந்த ஜாதியென்று நினைக்கின்ற ஒருவனுக்கு தனது படகை ஓட்டமாட்டேனென்று சொல்லி பட்டினியிருக்கத்தயாராய் இருக்கும்போது மற்றபடி பெரியோர்கள், பிரபுக்கள், சுயமரியாதை நமது பிறப்புரிமை என்று சொல்லிக் கொள்ளுபவர்களுக்கு பட்டினி கிடக்க வேண்டிய அவசியம் இல்லாமலிருக்கும் போதே இதற்குத்தக்க முயற்சி செய்யத் தகுந்த உணர்ச்சி இல்லையா என்று கேட்கின்றோம்.

## திருவார்ப்பு சத்தியாக்கிரகம்.

திருவாங்கூர் ராஜ்யத்தில் திருவார்ப்பு என்கிற இடத்தில் தாழ்ந்த ஜாதியார் என்பவர்கள் தெருவில் நடக்க சத்தியாக்கிரகம் ஆரம்பித்ததாக கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தோம், அம்மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்ளுமுன் அச்சத்தியாக்கிரகத்தை மகாத்மா நிறுத்துமாறு உத்திரவிட்டிருப்பதாய் தெரிகிறது. நீல் சத்தியாக்கிரகத்தைவிட திருவார்ப்பு சத்தியாக்கிரகம் அவ்வளவு மோசமானதா என்பது நமக்கு விளங்கவில்லை. மகாராணியும் போலீஸ் கமீஷனரும் நன்மை செய்வார்கள் என்று தாம் அறிந்ததாக மகாத்மா தெரிவித்திருக்கிறார்.

## வகுப்பு வாதம் ஒழிந்ததா?

சென்னையில் பார்ப்பனர் கையாளாக இருந்து வந்த ஸ்ரீமான் பக்தவத்சலு நாயுடுவைப்பற்றி பலரும் அறிந்திருக்கக்கூடும். அவர் கார்ப்பரேஷனில் இருக்கும் வரையும் பார்ப்பனர்கள் இஷ்டப்படி கமிஷனரை வைவதையே தொழிலாகக் கொண்டவர் அவருடைய புத்திசாலித்தனம் அறிய வேண்டுமானால் ஒரு விஷயத்தில் பார்க்கலாம் அதாவது கமிஷனர் முனிசிபல் பள்ளிக்கூடங்களுக்கு புஸ்தகங்கள் வாங்குவதில் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு வெள்ளைக்கார் கம்பெனியிலும் பார்ப்பனர் கம்பெனியிலும் வாங்கி வருவதைத் தெரிந்தும், ஒரு நாயுடு கம்பெனியில் நூறு ரூபாய் சிலவைக்கு புஸ்தகம் வாங்க நேரிட்டதற்காக ஸ்ரீ பக்தவத்சலு நாயுடு அவர்கள், புஸ்தகக் கடைக்காரரும் கமீஷனரும் நாயுடுவாய் இருப்பதால் தானே இந்த பள்ளிக்கூட புஸ்தகங்கள் நாயுடு கம்பெனியாரிடம் வாங்கப்பட்டது என்பதாய் ஒரு கேள்வி கேட்டார். இந்த கேள்வி கேட்ட ஸ்ரீ பக்தவத்சலுவும் ஒரு நாயுடுதான் என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் இந்த கேள்வியில் எவ்வளவு புத்திசாலித்தனமிருக்கும் என்பதை அறியலாம். அவ்வளவு தூரம் பார்ப்பன மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த ஸ்ரீ நாயுடு அவர்கள் சென்னை கார்ப்பரேஷனில் தொழிலாளர் பிரதிநிதியால் அதிகமான ஓட்டுகளால் தோற்கடிக்கப் பட்டார்

இப்போது காலுகா போர்ட்டிலும் ஸ்ரீ நாயுடு பார்ப்பனர்கள் ஆயுதம் என்பதற்காகவே அதிகமான ஓட்டுகளால் தோற்கடிக்கப் பட்டார் அதாவது ஸ்ரீ பக்தவத்சலத்திற்கு 26 ஓட்டுகளும் அவருக்கு எதிரியாய் நின்றவருக்கு 443 ஓட்டுகளும் கிடைத்தன. 417 அதிகமான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டிருந்தால் வகுப்புவாதம் வளருகின்றதா செத்துவிட்டதா என்பதை யோசித்தால் தெரியாமல் போகாது. ஒவ்வொரு ஊரிலும் இதை நாம ஒப்புக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம். சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தில சர்க்கார் நாணயம் இன்னது என்று தெரிந்து போய்விட்டது. வைக்கம் சத்தியாக்கிரகத்தின் போதும் மகாத்மா ராணியிடமும், திவானிடமும், போலீஸ் கமிஷனரிடமும் பேசிவிட்டுத் தன் போனார். கடைசியாக அது வைக்கத்திற்கு மாத்திரம் முடிவதே பெரிய கஷ்டமாய் போய்விட்டது மற்ற இடங்கள் எல்லாம் அப்படியேதான் இருக்கிறது. இதனால் லாபம் என்ன. ஜனங்களுடைய முயற்சியையும் உணர்ச்சியையும கட்டுப்பாடாய் எழுந்த ஆசையையும இப்படிப்பட்ட தடங்கல்கள் அழித்து விடுகின்றன. மறுபடியும் ஆரம்பிப்பதென்றால் இலேசான காரியமல்ல. ஆகவே ஏதாவது ஒரு இடத்தில் யோக்கியமான உரிமைக்கு சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருக்க வேண்டுமே ஒழிய ஆரம்பித்த காரியங்களை நிறுத்துவது நன்மையபயக்காது என்பதே நமதபிப்பிராயம்.

இதே மாதிரி நடந்து கொண்டு தான் வருகின்றது. இதை மாற்றத்தான் சென்னையில் காங்கிரசு நடத்துவதும், மகாத்மாவைக் கொண்டுபிரசாரம் செய்விப்பதும்பார்ப்பனர்களுக்குஇதுசமயம் மெத்த அவசியமாய்ப் போய்விட்டது. இதனால் நமதுமக்கள் ஏமாறவுங்கூடும். அன்றி இந்த வெற்றி அடைந்த நிலைமையே பார்ப்பனரல்லாத இயக்கத்தாரும் மெய்மறந்து அக்கிரமங்கள் செய்து, நன்மை செய்யவேண்டிய சந்தர்ப்பங்களை சரியானபடி உபயோகப்படுத்திக் கொள்ளாமல், சுய நலத்தையே பிரதானமாகக் கருதி வந்து, அடுத்த தேர்தலில் பார்ப்பனர்கள் இப்பொழுது அடையும பலனை அடையவும கூடும. எப்படி முடியுமோ என்பது நமக்கு கவலையாகத்தான் இருக்கிறது ஏனெனில் சென்னை முனிசிபல் பிரசிடெண்டு தேர்தலிலேயே இந்த யோக்கியதை விளங்கிவிடும போலவே காணப்படுகின்றது.

## சுயமரியாதை உதயம்.

படகு ஓட்டுபவர்களை சில இடங்களில் தாழ்ந்த ஜாதியாக மதிக்கப்படுகின்ற வழக்கம் சில இடங்களில் இருந்து வருகிறது. அதை உணர்ந்த சுவராஷா என்கிற இடத்தில் உள்ள படகு ஓட்டிகள் அந்த வழக்கமாய் நடக்கும் தீர்த்தவாரி உற்சவத்திற்கு பார்ப்பனர்களுக்கு படகு கொண்டு வர மறுத்து விட்டார்களாம். ஏனெனில் தங்களை அப்பார்ப்பனர்கள் தாழ்ந்த ஜாதியாய்க் கருதுவதால், உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்ளும் எவருக்கும படகு ஓட்ட முடியாது என்று சொல்லி மறுத்து விட்டார்களாம். இந்த உணர்ச்சி தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் தோன்றினால் உயர்ந்த ஜாதி என்கிற ஆணவமும ஏமாற்றலும் ஒழிந்து போகுமென்றே நினைக்கிறோம்.

## ஈரோடு பார்க் பச்சைப்புல் ரகசியம்.

இவ்வூர் நகரபரிபாலன சபையின் அக்கிராசனராயிருந்த ஸ்ரீமான் தண்டலம் ஸ்ரீனிவாச முதலியார் அவர்கள் தன் சொந்த மாட்டின் உபயோகத்திற்காகநாளது தேதி வரை முனிசிபல் பார்க்கிலிருந்து டி. பார்க்கில் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் ஒரு கருங்கல்பாளையம் நல்லதம்பி பிள்ளை மகள் அமிர்தம்மாளை தினந்தோறும் சுமார் நாலு அணா பெருமபடியான ஒரு புல் சுமை கொண்டுவரும்படி உத்திரவு செய்த பிரகாரம் டி. அமிர்தம்மாள் அது போல் செய்து வந்து இன்று வழக்கம போல் புல் சுமையுடன் கடைவீதியில் கொண்டுவரும் காலத்தில் ஸ்ரீமான் K. N. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள் (ஒரு கவுன்சிலர்) கண்டுபிடித்து டி. யாளிடம் ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கி டி. நகலுடன் போலீசுக்கு ஒரு ரிபோர்ட்டு எழுதியனுப்பியிருக்கிறார் அதின் பேரில் போலீஸ் அதிகாரிகள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பது தெரியவில்லை. இப்படிக்கு நேரில பார்த்தஒரு வரி செலுத்துவோன்.

## வாலிபர்களுக்கு வேண்டுகோள்.

பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தின் மாகாண மகாநாடு இம்மாதம் 22, 23 தேதி சனி ஞாயிறு கிழமைகளில் சென்னை பீபிள்ஸ் பார்க் மைதானத்தில் போடப்பட்டிருக்கும் அழகிய கொட்டகையில் பெங்களூர் முனிசிபல சேர்மென் ஜனாப் மு. அப்பாஸ் கான் சாயபு அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப்படி நடைபெறப் போகின்றது.

இந்த 22, 23, தேதிகள் தீபாவளிக்கு முதல் நாட்களாக இருப்பதால் சில மாணவர்களுக்கு அசௌகரியமாயிருந்தாலும் இருக்கலாம். இந்த தேதி ஏற்பட நேர்ந்த சம்பவம என்னவென்றால் சென்னை சட்டசபை இத்தேதிகளை அனுசரித்து நடக்கும் என்பதாக முதலில் தெரியவந்ததால் அந்தத் தேதிகளை குறிப்பிட்டு அக்கிராசனருக்குத் தெரிவித்ததில் அக்கிராசனர் தன்னுடைய மற்றக் காரியங்களை எல்லாம் வேறு தேதிகளுக்கு ஒத்திவைத்து விட்டு இதைக் கவனிக்க வைத்துக் கொண்டாரானதினாலும், இதை இப்பொழுது மாற்றுவதற்கு பல விதத்திலும் அசௌகரியமாயிருப்பதாலும, இதே தேதிகளில நடைபெற வேண்டியதாகி விட்டது. ஆனாலும் ஆங்காங்குள்ள வாலிப சகோதரர்கள் பண்டிகையைவிட இமமகாநாடு முக்கியமானதென்பதாகக் கருதி மகா நாட்டிற்கு வந்து மகாநாட்டை வீரமுள்ளதாக ஆக்கி பலன் தரத்தக்க வேலைகள் நடைபெறும்படி செய்ய முயற்சிக்க வேண்டும. வாலிபர்களின் தன மதிப்பை பரிசோதிக்கவே இம்மகாநாட்டின் தேதி ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம் ஆதலால அவசியம வரும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆங்காங்குள்ள வாலிப சகோதரர்கள் அவசியம் "குடி அரசுக்கும்" "திராவிடனுக்கும்" சந்தாசேர்க்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஒரு 500 சந்தாவாவது "குடி அரசு"க்குப் புதிதாகச்சேரும் பக்ஷம் கோயமுத்தூர் மகாநாட்டின் பலனுக்கு இசையானவர்களாவோம். இதை ஒவ்வொருவரும் அதாவது வாலிபர்கள் மாத்திரமல்லாமல பெரியோர்களும் கவனிக்க வேண்டுகிறோம்.

## ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் சிலை.

### மூக்கு அறுபட்டது.

சினெட் கட்டட காம்பவுண்டில் வைக்கப்பட்டிருக்கும் சென்னை கவர்னர் கவுன்ஸிலின் முதல் இந்திய அங்கத்தினரான காலஞ்சென்ற திரு. வி. கிருஷ்ணசாமி அய்யருடைய சிலை சிறிது பின்னப்பட்டிருக்கிறது. உடைபட்ட நோயோ உடைத்தவர் இன்னார் என்றோ எதுவும் தெரியவில்லை.

'திராவிடன்'

# பார்ப்பனர்களின் அயோக்கியப்பிரசாரம்.

‘சுகோதயம்’ என்னும் பார்ப்பனப் பத்திரிகை ஒன்று மகாத்மாவுக்கு வக்காலத்துப் பேசுவதுபோல் நமது பிரயத்தினங்களை ஒழிக்க “இழி பிரசார”மென்றும் “சந்திரனைப்பார்த்து நாய் குலைப்பதுபோல்”, என்றும் இன்னும் பலவிதமாய் எழுதியிருந்ததை சென்ற வாரமே கண்டித்து எழுதியிருந்தோம். அதற்குப் பின்னும் அப்பத்திரிகை அவ்விஷயம் தெரியாததுபோல் மறுபடியும் அதேமாதிரி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும், “குடி அரசையும்”, திராவிடனையும் பற்றி வசை மொழிகள் நிரப்பி எழுதியிருக்கின்றது.

பத்திரிகையைப் பற்றியோ அல்லது ஒரு மனிதனைப்பற்றியோ கண்டிக்க நேர்ந்தால், யோக்கியமானவர்களுக்கு வழி என்னவென்றால், அப்பத்திரிகை எழுதிய வாசகங்களையும் பேசிய பேச்சுக்களையும் தன் பத்திரிகையில எடுத்துப் போட்டு அதன்மேல் மறுப்பு எழுதினால் அது வீரத்தனமாகும். அஃதின்றி இழவு வீட்டில் கிழவிகள் ஐயோ ஐயோ என்று மாரடித்துக்கொள்வதுபோல “திட்டிவிட்டானே” “வைதுவிட்டானே” என்று ஓலமிடுவதும், அதற்காக அயோக்கியத்தனமான காரியத்தில் பிரவேசித்து இழிமொழிகள் பொழிவதும் கோழைத்தனமும் ஈனத்தனமும் ஆகும் என்பதே நமதபிப்பிராயம்.

‘குடி அரசோ’ ‘திராவிடனோ’ ஸ்ரீ ராமசாமி நாயக்கரோ எழுதிய சொன்ன வாசகங்களில் இன்ன இன்ன பிரிவு இன்ன வார்த்தை இன்ன கருத்து இன்ன எழுத்து குற்றமானது என்று விளக்கிக்காட்டி மறுப்பெழுதி கண்டித்து இருந்தால் சுகோதயத்திற்கு பொது விஷயத்தில் கவலையிருக்கிறது, உண்மையை விளக்க யோக்கியமாய் பாடுபடுகின்றது என்று நினைக்கவிடமுண்டு.

அப்படிக்குயில்லாமல் காந்தியைப்புகழ்வதுபோல் வேஷம் போட்டுக்கொண்டு யாரையும் வைதுவிடலாம் என்று நினைத்துக்கொண்டு எழுதினால் அவ்வயோக்கியத்தனத்தைக்கண்டிக்காமல் இருப்பது பயங்காளித்தன்மை ஆகும். தவிர இதுவரையில் இப்பார்ப்பனப் பத்திரிகையாகிய சுகோதயமானது “குடி அரசு” “திராவிடன்” நாயகா ஆகியவர்களின் எந்த வார்த்தையைக் கண்டிக்கிறது, அதற்கு என்ன காரணம் சொல்லிக்கண்டிக்கிறது, என்று யாராவது சொல்லக்கூடுமா? அல்லது அதன் ஆசிரியர் நெஞ்சில் கைவைத்துப் பார்த்து இன்னதற்காக கண்டித்தோமென்று திருப்தி செய்து கொள்ளமுடியுமா என்று கேட்கிறோம். ஏன் அப்படி கேட்கிறோமென்றால் இப்பார்ப்பனர்களிடத்தில் பாரம்பரியமாய் இருந்துவரும் வஞ்சகத்தன்மையை வெளிப்படுத்திக்காட்டவே அல்லாமல் வேறல்ல. தவிர 1—10—27ல் சுகோதயத்தில் “அறிவிலிகளின் தூஷணைப்பிரசாரம்” “அநாகரீக நீச பிரசாரம்” “பொய்யுரைகள்” “மூடக்கொள்கைகளை பார்ப்பனரிடத்தில் உள்ள துவேஷத்தால் ஸ்தாபிக்க பிரசாரம் செய்யும் நாஸ்திக மூடவெறி பிடித்த ஸ்ரீ ராமசாமி நாயக்கர் பண்டைய பத்மாசூரனைப்போல் கொடுந்தவம் கிடக்கின்றார். சுயமரியாதை சாஸ்திரக்குப்பை என்கிற பதங்களை உச்சரித்து, பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றும் வித்தை கற்று, சமயோஜித வேடந்தாங்கி ஆணவங்கொண்ட மாஜி மிளகாய் வியாபாரியான ஸ்ரீ நாயக்கர் மகாத்மாவையும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரையும் வைகிறார்” என்றெழுதிவிட்டு கீழ் பாகத்தில் தேச பக்த பூஷணம் எஸ் ராமனுஜன் என்றும் கதரபிவிர்த்திக்கு பெரும் தியாகம் செய்த காசி விஸ்வநாதம் செட்டியார் என்றும் எழுதி அவர்களை புகழ்ந்துவிட்டு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களையும் புகழும் மாதிரியாய் காட்டி கடைசியில் ஸ்ரீமான் ஈரோட்டு நாயக்கருக்கு விக்னேஸ்வர பூஜை நடத்தியிருந்தால் இன்னும் கொஞ்சம் பணம் சேர்ந்திருக்குமென்றும் இவ்வாறான வார்த்தைகள் அதில் காணப்படுவதன்றி வேறில்லை.

எனவே நாம் சுகோதயப் பார்ப்பனரைமாத்திரமல்ல, நமது நாட்டிலுள்ள மற்றெல்லாப் பார்ப்பனரையுமே கேட்கிறதென்னவென்றால் ‘நாயக்கர்’ ‘திராவிடன்’ ‘குடி அரசு’ ஆகிய இவைகளில் எது அநாகரீகப் பிரசாரம்? எது அறிவிலிகளின் பிரசாரம்? எது பொய்யுரைகள்? எது மூடக்கொள்கைகளை பிரசாரம் செய்யத்தக்கது? இவைகளுக்கு எந்த எந்த தனிப்பார்ப்பானிடத்தில் துவேஷமிருக்கிறது? எந்த தனிப்பார்ப்பானிடத்தில் பேச்சு வார்த்தை எந்த வார்த்தையும் கூட இல்லாமல் விரோதத்துடன் இருக்கிறது? எது மூட வெறி பிடித்த நாஸ்திகத் தன்மை கொண்டது? எதனால் நாயக்கர் பத்மாசூரனுக்கு ஒப்பானார்? சுயமரியாதை சாஸ்திரக்குப்பை என்கிற பதத்தால் எந்த விதத்தில் ஏமாற்றுகிறார்? ஏமாற்றுவதற்கு உண்டான உள்எண்ணம், சுயநலம் ஆகிய இவைகள் என்ன? இதனால் ஏமாற்றப்பட்டவர்கள் அடையும் கஷ்டம் என்ன? நாயக்கர் எத்தனை வேடம் கொண்டார்? அதனால் என்னென்ன லாபமடைந்தார்? எந்த வார்த்தையில் ஆணவம் விளங்கிற்று? அதில் என்ன தப்பு கண்டுபிடிக்கப்பட்டது? மிளகாய் வியாபாரம் செய்ததில் என்ன இழிவு? மகாத்மாவையும ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியையும் திரு நாயக்கர் வைததற்கு சுகோதயம் என்ன சமாதானம் சொல்லத் தயாராயிருக்கின்றது? அதில் எந்த பாகத்தை தப்பு என்று எடுத்துக்காட்டியிருக்கின்றது? என்றுகேட்பதுடன் “நாயக்கருக்கு விக்னேஸ்வரபூஜை செய்திருந்தால்” என்பதின் அர்த்தமென்ன? என்றும ஸ்ரீமான் ராமனுஜனுக்கும் காசி விஸ்வநாதம செட்டியாருக்கும் தேசபக்த பூஷணம் கதரபிவிர்த்திபெரும் தியாகம் எனகிற பட்டங்கள் கொடுக்கப்பட்டதின் அர்த்தம் ஆகியவைகளைக கேட்கிறோம் ஒரு தடவையாக, இரண்டு தடவையாக, மூன்று தடவையாக, இப்பார்ப்பனர்களைக் கேட்கின்றோம்.

இவற்றை ஏன் எடுத்தெழுதினோம் என்றால் இப்பார்ப்பனர்களைப்பற்றியும் அவர்களது பத்திரிகைகளைப் பற்றியும் நாம் ஆரம்பமுதல் சொல்லிவருவதும, அவர்களைப்பற்றி நம்பெரியார்கள் சொல்லிவந்ததும், சரியானபடி ருஜுவாவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாய் கிடைத்தது என்கிற சந்தோஷத்தை எல்லோரும் அனுபவிக்கவேயல்லாமல் மற்றபடி அதை மதித்து அதற்கு மறுப்பெழுதுவதையே பிரதானமாய் கருதி அல்ல. பத்மாசூரனுக்கு சமமாய் நாயக்கரை சொல்லுவதால் இப்பார்ப்பனர்கள் இதற்கு முன் எப்பேர்ப்பட்டவர்களை இவர்கள் ராட்சதர்கள் எனறும் அசுரர்கள் என்றும் எழுதிவைத்திருக்கின்றார்கள் என்பதும் ராமசாமி நாயக்கரைப்பற்றி குற்றம் சொன்னவர்களையே தேசபக்த பூஷணம், பெரும் தியாகி, என்று சொல்வதால் எப்பேர்ப்பட்டவர்களை இவர்கள் இதற்குமுன் புகழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும் இதனாலேயே அறிந்து கொள்ளலாம். பார்ப்பனக் கொடுமையை அதாவது பசுவைக்கொன்று சுட்டுத்தின்பதை அடக்க முயற்சித்த இராவணனை ராக்ஷசன் என்றுஎழுதிவைத்திருப்பதையும், அண்ணனைக் காட்டிக்கொடுத்ததம்பியாகியவிபூஷணனை ஆழ்வாராக்கி கோவில்களில் வைத்துப் பூஜைசெய்யச் செய்வதை சுகோதயப்பார்ப்பனச் செய்கைகள் பின்பற்றுகிறதா இல்லையா? என்றுப கேழ்க்கிறோம். மகாத்மாகாந்தியின் வருணாசிரம தர்மத்தை வரிவரியாய் வார்த்தை வார்த்தையாய் கண்டித்ததும் அவர் ஸ்ரீமான் ராஜகோபாலச்சாரி சொற்படி ஆடுவதைத்தவிர வேறு ஒன்றும் இங்கு செய்யமுடியாது என்பதும் ராஜகோபாலாச்சாரியாரின் தேசாபிமான வேஷமெல்லாம் பார்ப்பனப் பிரசாரமே அல்லாமல் வேறு அல்ல என்பதும் பற்றி எவ்வளவோ காலமாய் எவ்வளவோ தூரம் விளக்கி எழுதி வந்திருக்கிறோம். இவற்றில் எந்த விஷயத்தையாவது சுகோதயப் பார்ப்பனரோ அன்றி மற்ற எந்தப்பார்ப்பனரோ மறுதது சமாதானம் எழுதி இருக்கின்றாரா? அல்லது எழுதத் தயாராயிருக்கின்றாரா என்று கேட்கிறோம். இப்பார்ப்பனக் கூட்டங்கள் தேவஸ்தான மசோதா செய்தபோது “மதம்போச்சு, மதம் போச்சு, நாஸ்திகமாச்சு”. என்று ஓலமிட்டார்கள். இப்போது தேவஸ்தான ஆபீசைச் சுற்றி காவல்காக்கின்றார்கள் சர். தியாகராய செட்டியாரை டயர் என்றார்கள். டாக்டர் நாயரை ராக்ஷசனென்றார்கள். வெளி ஊரில் பொதுக்காரியத்திற்காகப் போய் அவர் செத்துப்போன காலத்தில் அங்கிருந்த பார்ப்பனர்கள் எல்லாம் கிட்டக்கூட வாராமல் ஓடிப் போனார்கள். இப்போது “ஸ்ரீமான்கள் நாயரும் தியாகராய செட்டியாரும் பெரியார்கள், நல்லவர்கள் பனகால் அரசர் மகா அயோக்கியர், ராமசாமி நாயக்கர் நாஸ்திகன், வெட்டிப் புதைக்கவேண்டும” என்கிறார்கள். தவிர நாமும நமது பிரசாரத்தினால் பாதகமடையக் கூடிய கூட்டத்தார்களுக்கு நம்மை எதிர்க்க யோக்கியமான வழி ஒன்றுமில்லை என்றும, அவர்கள் மதம் போசசு கடவுள் பேச்சு, வேத சாஸ்திரம் போச்சு,

## பிராமணர்களும் பெண்மானமும்.

(ஸ்ரீமதி கா. அலமேலு மங்கத்தாயாரம்மாள் திராவிடனில் எழுதுவது).

'மித்திரன்' பத்திரிகை ஒன்றிருக்க ஒன்றெழுதி வருகின்றது. அவமரியாதையிலும் கை எழுத ஓடுகின்றது. மகாத்மா காந்தி அவர்களுக்கு 9—9—27ல் பெண்கள் பணமுடிப்புக் கொடுத்த சமயத்திலும் ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயாரம்மாள் வந்தனம் கூறினள் என்று ஒரே ஒரு வாக்கியத்தில் எழுதியது. அவ்வாக்கிய முடிபும் அவமதிப்பிலே முடிந்தது. இதையெல்லாம் விபரீதமாய் நினைக்கப்படாதென்றாலோ, நானும் மற்றவர்களும் அப்படியே விபரீதமாய் நினைக்காதபடி, லேடி சதாசிவ அய்யர் காந்தியைப் புகழ்ந்து பேசினள், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் காந்திக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தாள், பிரம்மஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தான் என்று எதார்த்தமாய் எல்லாரையும் ஏகவசனமாய் ஏற்றத் தாழ்வின்றி அவசியம் எழுதியிருக்கவேண்டும். அப்பொழுது என்னைப் பற்றி எழுதியதும் எதார்த்தமென்று நினைப்பேன். மற்றவர்களும் நினைப்பார்கள், என்னை மட்டும் "வந்தனம் கூறினள்" என்று ஏகவசனமாய் எழுதவேண்டியது என்ன! ஸ்ரீமதி சகோதரி முத்துலட்சுமி அம்மாள் அவர்களையும் மற்றவர்களையும் அகௌரவப் படுத்தவேண்டுமென்பது என் நோக்கமல்ல. சூதுவாதின்றி எல்லாரையும் கௌரவப்படுத்தவேண்டுமென்பதே என் நோக்கம் அவைகளை எடுத்துக்காட்டாவிட்டால் எப்படித் தெரியும்? 'சுதேசமித்திரனை'த் தவிர வேறெந்தப் பத்திரிகையும் ஏகவசனமாய் எழுதுவதில்லை. பிராமணர்களைத் தவிர மற்றெவரும் அவள் இவள் என்று ஏகவசனத்தில் பேசுவதுமில்லை. பிராமணர்கள் தமிழ் பேசவும் எழுதவும் தெரியாதவர்களா? வெளிப்படவேண்டும். எந்த ஜாதியாயினும், எந்த மதமாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், உயர்வாயினும், தாழ்வாயினும், யாராயினுஞ்சரி கௌரவமாய் எழுதுவதல்லவோ பத்திரிகையின் லக்ஷணம். இத்தேசத்திற்கு முற்றும் சம்பந்தமில்லாத ஓர் அமெரிக்க தேசப்பெண் இராஜ தந்திரத்திலே இத்தேசப் பெண்களின் பெருமையைக் குறைவுபடுத்தினரோ என்று ஆகாய மளாவுமட்டும் எட்டி எட்டிக் குதிக்கின்றவர்கள் இத்தேச மாதரின் மரியாதை விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? உள்ளதைச் சொன்னால் உடம்பெரியலாம். 1903 வருஷ முதற்கொண்டு 'மித்திரன் பத்திரிகை'க்கு விஷய தானத்திலே சம்பந்தப் பட்டுள்ளேன். ஏறக்குறைய 25 வருடகாலமாய் என் சுய நன்மையை வெறுத்து பொதுநன்மையை நாடி வேலையும் செய்தேன். ஆயினும் 'பெணமானம்' என்பதைக் கவனியாத பெரியோர்கள் ஓர் பெரியோர்களா? இன்று என்னை அவள் இவள் என்று எழுதவும் பேசவும் முன்வந்தவர்கள் நாளை எவரையும் கேவலமாய்எழுதஎன்துணியார்கள். மதுரை ஸ்ரீஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னபடி பிராமணர்களுக்கு அநேகமாய் சுஜாதி அபிமானமே அவர்களுடைய தேசாபிமானம், சுராஜ்ஜியம் வந்தால் நம்மை எந்நிலையில் வைப்பார்களோ? தேசம் எந்நிலையில் இருக்குமோ தெரியவில்லை. சுயராஜ்ஜியமும் வரவேண்டியதே வருவதற்கு முன் முக்கியமாய் பிராமணர்களும் மற்றவர்களும் திருந்த வேண்டும். கதர் உடுத்தி காந்திக்கு ஜே என்று கத்திக்கதறி கல்லெடுத்தெறிகின்றார்கள். காந்தி அடிகள் பெயரை ஒட்டியே இவ்வளவு விபரீதம் நடக்கின்றது. காந்தி அடிகள் செவிக்கு இவ்வக்கிரமம் எட்டுமோ எட்டாதோ ஈசனே அறிய வேண்டும. காந்தியடிகளை அவதாரமாக்கினும்அவர் சொன்னபடி நடப்பவர் தாணிலர். திருநெல்வேலி ... (27—9—27) மீட்டிங்கிலும் நான் பேசினபோது பிரஸிடெண்டாயிருந்த பிராம்மணர் எம். எ. எல். டி. ஐயங்கார் அவர்களும் சபையாருக்கு என்னைப்பற்றி அறிவிக்கும்போது 'பேசுவாள்' என்றே சொன்னார். என்ன விபரீதம் பாருங்கள்.

மோசம் போச்சு என்று கத்துவார்கள். ஒவ ...ர்கள் அயோக்கியத்தனமான விஷமப்பிரசாரம் சய்வார்கள். அவைகளை அடக்க நமக்குத் தெரியும் அவர்கள் நமது பிரயத்தனத்தின் ஒரு ... அசைக்க முடியாது என்றும் சொல்லிவிட்டுத்தான் இவைகளை ஆரம்பித்தோமே அல்லாமல் சுதேசயப் பார்ப்பனர் போன்றவர்கள் நம்மை தேசபக்த பூஷணம் தியாக உருவம் என்று சொல்லுவார்கள் என்று நினைத்தல்ல அன்றியும் நமது பிரசாரத்தால் உண்மையான கடவுள், யோக்கியமான மதம், சத்தியமான வேத சாஸ்திர புராணம் ஆகியவைகள் ஒன்றும் போகவே போகாது. ஆனால் பொய்க்கடவுள், பொய்மதம், பொய் வேத சாஸ்திரக் குப்பை இவைகளை சொல்லிக்கொண்டு வயிறு பிழைப்பது முதலியவைகள். போகலாம் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நமக்கு அவர்களிடத்தில் துரோகமோ விரோதமோ ஒன்றுமேயில்லை. அவர்களது அயோக்கியத்தனத்தினிடம் எப்படி யோக்கியன் அன்பு செலுத்த முடியும் என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள்.

'திராவிடன்'

## பார்ப்பன நாகரீகம்

### குரோத புத்தியும் சிறுமைக் குணமும்.

ஸ்ரீமதி அலமேலு மங்கத்தாயாரம்மாளவர்கள் கூட்டங்களில் பேசும்பொழுது பார்ப்பனக்காலிகள் அவரைப்பேச விடாமல் கூச்சல் போட்டுத்தடுத்தது, தகாத வார்த்தைகளால் நிந்தித்து, கல்லால் அடிப்பது பற்றியும், பார்ப்பனப்பத்திரிகைகள் அவர்கள் பேசினதை பேசியபடி பிரசுரிக்காமல் திரித்தும், கூட்டியும் குறைத்தும், மரியாதையற்ற ஏகவசனத்தில் அவருடைய பெயரைச்சொல்லி பிரசுரிப்பதைப் பற்றியும் கண்டித்து மேற்படி அம்மையார் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டதைக் குறித்து 'திராவிடன்' பத்திரிகை எழுதுவதாவது:—

ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மாள் அவர்களால் 'பிராமணரும் பெண் மானமும்' என்ற தலைப்பெயரிட்டு நமக்கு அனுப்பப்பட்ட ஒரு விஷயத்தை இன்று வேறிடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அவ்வம்மையார் பார்ப்பனரல்லாத பெண்மணிகளில் பொறுக்கி எடுத்தமணி போன்றவர்கள். நமது சமூகத்தொண்டு செய்வதில் அவ்வம்மையாரே முன்னிற்கிறார்கள். அப்படிப்பட்ட அவ்வம்மையார் எழுதியிருக்கும் கடிதத்தில் உள்ள ஒவ்வொரு வரியும் படிப்பவர்கள் கண்ணில் நீர் பெருகாமலும் மனதைப் பிளக்காமலும் இருக்க முடியாது. 'சுதேசமித்திரன்' பார்ப்பனப் பத்திரிகை அவ்வம்மையார் விஷயத்தில் செய்யும் கொடுமையும், மரியாதைக்குறைவாய் நடத்தும் தன்மையும் ஒவ்வொருவர் மனதிலும் ஊடுருவிப் பாயத்தக்கது. பொதுவாக பார்ப்பனர்களுக்கு மரியாதைக் குறைவு. தமயனையும் தகப்பனையும் கூட அடா! என்று பேசுவார்கள். அதிலும் ஸ்திரீகளிடத்தில் மற்றெல்லோரையும் விட அதிகமான மரியாதைக் குறைவு என்றே சொல்லலாம். தாயாரையும் தமக்கையையும் 'அடி' என்று தான் கூப்பிடுவார்கள். அதிலும் புருஷன் செத்துப்போனால் அவர்களை நாயிலும் கேவலமாய் மதிப்பதுடன் அவர்கள் எங்கு விவசாரித்தனம் செய்து விடுவார்களோ எனப்பயந்து நகைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு மொட்டை அடித்து விகாரப்படுத்தி பட்டினியிலேயே அழுத்திவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் நமது பெண்மணிகளை எப்படி மதிப்பார்கள்? அதிலும் நமது பெண்மணிகளை சூத்திரச்சிகள் என்று எழுதிவைத்துக்கொண்டு மனதிலும் அது போலவே நினைத்துக்கொண்டிருக்கும் கொடியர்கள் மதிப்பார்களா? அதிலும் அவ்வம்மையாரை தமது சமூகத்திற்கே ஒரு விரோதிபோல் நினைத்துக்கொண்டிருக்கும் மித்திரன் கூட்டத்தார் எப்படி மதிக்கக்கூடும். எனவே அவர்கள் நடந்து கொள்ளுவது அவர்கள் ஜாதிபுத்திக்கு ஏற்றபடி நடக்க வேண்டாமா என்று தான் கேட்கிறோம். அதென்ன வென்றால் நமது தாய்மாரை நமது சகோதரிமார்களை அடி புடி அவள் இவள் என்று சொல்லுகிற எழுதுகிற அவர்கள் சகவாசம் வைத்துக்கொள்ளலாமா? அவர்கள் பத்திரிகைகளை வாசிக்கலாமா என்பதுதான்.

ஒரே கூட்டத்தில் ஸ்ரீமான் சதாசிவய்யர் அவர்களின் சம்சாரமவர்களைப்பற்றி சொல்லும்போது 'பேசினார்கள்' என்று சொல்லிவிட்டு ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மா அவர்களைப்பற்றி பேசும்போது பேசினாள் என்று சொல்லுவதில் குரோத புத்தியும் சிறுமைக்குணமும் இருக்கிறதா இல்லையா என்று வாசகர்களே யோசித்துக் கொள்ளவும்.

## ஹிந்து மதாபிமான சங்க ஆண்டு விழா.

அன்புள்ள ஐயா,

இறைவன் திருவருளால் இச்சங்கத்தின் பத்தாவது ஆண்டுவிழா நிகழும் பிரபவ வருஷம் புரட்டாசி-மீ 30-உ (16-10-27) ஞாயிற்றுக்கிழமை பகல் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஹைஸ்கூல் ஹாலில் நடைபெறும். திருநெல்வேலி தமிழறிஞரும், சென்னை சட்ட சபை அங்கத்தினருமான திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமை வகிப்பார். அன்பர்களின் வரவை விரும்புகிறோம்.

ஹிந்து மதாபிமான சங்கத்தார்,
காரைக்குடி.

ஆரூடம்:— தர்ம ஞாயமான கேள்விகள் 6-க்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P. O. (S. I.)

4-ம் பக்கத் தொடர்ச்சி

க்கு உரித்தானவர்களுடைய மனப்பாங்குக்கு ஒத்த அரும்பா ஒவ்வாத அரும்பா என்று இவர் சொல்லவில்லை. ஆனதால் ஒவ்வாததைத் அரும்பென்றே கழிக்கவேண்டு மென்பது தான் அதன் கருத்து.

"இவ்வர்த்தம் சத்வகுண முள்ளவர்க்கல்லாமல் புலப்படா" தென்றும் சொல்லுகிறார்

சத்வகுண முள்ளவருக்கு கடப்பாரையை ஆயுதமாகக்கொள்வது இவர் வழக்கில் உசிதமாகும் போது மற்றவர்களது சத்வகுணத்துக்கு வந்த குறை என்ன என்பது எமக்கு விளங்கவில்லை

தவிர "கொழுத்துத்தடித்த குமாரனும் குமரியும் உங்களுள் இல்லையா" என்கிறார்.

எங்கள் குமாரனும் குமரியும் ஒன்றுபடுவதற்கு இவர் எதற்காகத்தாகு வாங்குவது என்று தான் கேட்டதே யொழிய வேறில்லை. அதற்கு பதில் சொல்லாமல் உங்களில் இல்லையா என்கிறார் என்றால் இதை என்னென்று நினைப்பது என்பதை வாசகர்களே அறியட்டும்.

"பிராமணர்களாவது ஒவ்வொரு கருமத்திலும் அன்னதானம்பூரி இவைகள் இல்லாமல செய்யமாட்டார்" என்கிறார். இவர்கள் அன்னதானம் பூரியாருக்குக் கொடுகிறார்கள், மற்றவர்கள் யாருக்குக்கொடுக்கிறதில்லையென்பதை யோசித்தால் பார்ப்பனர், பார்ப்பனர்களுக்கே அதிலும் தாங்கள் மந்திரக் களுக்கே என்பதும், மற்றவர்கள் நான்கு ஜாதியாருக்கும் கொடுக்கிறார்களென்பதும் நன்கு விளங்கும். இதில் யாருடைய தானம் பெரிது என்பதைவாசகர்களே அறியட்டும்.

"ஆச்சாரியாருக்குக் கொடாதவர்கள் மூடர்களென்றும், அவர்களைப் பின் பற்றுபவர் குரும்பாடுகள்" என்றும் சொல்லுகிறார்.

இதை இவர் எந்த நினைவுகொண்டு சொல்லுகிறார் என்பது வாசகர்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

இவர், "ஆசார்யர்கள் பிறர் பொருளைக் கொண்டே ஜீவித்துவந்தார்கள் என்று எழுதிவிட்டு இப்பொழுது பிறர் பொருளைக் கொண்டு ஜீவிக்க வேண்டாமென்று எதற்கசுச் சொல்லுகிறார்" என்று கேட்கிறார்.

இது பிறர் பொருளைக்கொண்டு ஜீவித்து வந்த ஆசாரியர்களுடைய குணங்களுக்கும் கடப்பாறை ஆயுத ஆசாரிகளுக்கும் உள்ள தாரதம்மியத்தால் என்பது இவர் அறியார் போலும். 'இவர் நண்பர்கள் எங்களை கொலை களவு புலை உள்ளவர்கள் என்று சொல்லுகிறார்" என்கிறார்.

இதற்குச்சான்றாக இங்கிலீஷ் ரிப்போர்ட்ஷ் மெண்டு ரூம்களிலும், மகமமதிய சகோதரர் ளைப்புகளிலும், சில பிராமணங்களிலும் தாசித்தெருக்களிலும் காணலாம் என்பது இவர் அறியார் போலும்; இத்தகைய ஜாதியாராகிய ஆச்சாரியாரை பின் பற்றும் நண்பர் கூட்டத்திற்கு யுக்தங்கள் என்பிடிபடாது என்பது இவருக்குத் தோணவில்லை! தவிர,இவரே 'ஆசாரியன் சிஷ்யனைத் தேடி உபகாரம் சமர்ப்பித்து உபதேசம பண்ணினார் என்றிருக்கிறதை, இவர், ஆசாரியனை சிஷ்யன் தேடிச் சென்று அடையவேண்டும்" என்கிறார்.

இவை இரண்டிலும் பொறுப்பு இருக்கிறவர்களைத் தான் கவுரவிக்கிறது என்பது ஏற்படுகிறது. பொறுப்பிருக்க வேண்டியது பெரியோர்களுக்கா சிறியோர்களுக்கா என்பதை யோசிக்குமிடத்தில் இன்னார்க்கென்பது இவருக்கு விளங்காமல் போகாது. ஆனால் இவர் "நாங்கள் தானே உங்களை வருஷா வருஷம் தேடி வருகிறோம்" என்னலாம் அப்படி வருவது எதற்காக என்று மனதில் கையைவைத்து யோசிப்பாரேயானால், இவருக்காவது வாசகர்களுக்காவது விளங்காமல் போகாது என்பது எம்முடைய அபிப்பிராயம்.

அதேமாதமாகக் "கஷ்டம் விட்டதும் ஜகத் என்றமகரிஷி அருளிச் செய்தபடி கலியுகம் சரியாய் முடியும்" என்கிறார் இதுஜெமானால் "கலி சாது, சூத்ர சாது, ஸ்திரீ சாது" என்று மகரிஷியருளிய வாக்கியத்துக்கு என்ன அர்த்தம் பண்ணுகிறார் என்பது எமக்கு விளங்கவில்லை.

"பின்னும் இவர் வைஷ்ணவ சின்னங்களாலே அடையாளம் பண்ணப்பட்டவர்கள் எச்சாதியாயினும் எப்பிறப்பினராயினும் எத்தொழிலுடையவராயினும் அவைகளைப் பாராட்டாமல் அவர்களை சந்தோஷிக்கும்படி பூஜிக்கவேண்டும்" என்று சொல்லி அதற்கு மேற்கோளும் காட்டுகிறார்கள் இவைகளை யார் ஆசரித்து முதலில் காட்டவேண்டும் பிறகு யார் அதைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பவைகளை அறிய வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம். ஆகையால் இத்தகைய குரு இகழ்வு சமைழிவாதுல முயர்வா என்பதைவோர்களே அறியட்டும்.

இன்னுமமற்ற இவரது கட்டுரையைப் பற்றி சமயம வரும்போது விரிப்போம

---

## கொருக்குப்பேட்டை கார்ப்பரேஷன் பாடசாலையில் பார்ப்பனர்களின் அட்டூழியம்.

---

இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு சுமார் 13 வருடங்கள் ஆகின்றன. சென்ற அநேக வருடங்களில் இது மிகவும் சீர்குலைந்து மிகவும் க்ஷீண நிலையிலேயும்கூட இருந்தது என்று சொல்லலாம். ஆனால் சிவான் பகதூர் வெங்கட்ட நாராயண நாயுடு சுபீஷனராக வந்தவுடன் இப்பாடசாலை செழித்தோங்கியது தவிரவும ஸ்ரீமான் ஆர் ஜனார்த்தனம நாயுடு அவர்கள் கலவி இலாகா உதவி போகஸ்தராக வந்து சேர்ப்பு பெற்றவுடன், அவருடைய அரிய சேவையினாலும் விடாமுயற்சியாலும் 150 பிள்ளைகளிலிருந்து 400 பிள்ளைகளாகவும் 5 ஆசிரியர்களிலிருந்து 11 ஆசிரியர்களாகவும உயர்ந்துள்ளது. இப்பதினொரு ஆசிரியர்களில் 6 பேர் பார்ப்பனர்கள். தலைமை ஆசிரியரும மற்ற நால்வரும பார்ப்பனரல்லாதார். சென்ற 29-9-27-ல் இந்தப் பேட்டை கவுன்சிலர் மகா-௱-௱ ஸ்ரீ சஜ்ஜா முனுசாமி செட்டியார் அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து 35 ஏழைப் பிள்ளைகளுக்கு துணி இனாமாகவும் எல்லாப் பிள்ளைகளுக்கு மிட்டாயும பழமும் வழங்கினார் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் வருவதற்கு தாமதமானவுடன் ஏழைப்பிள்ளைகள் எல்லாரும் சற்று பேச ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஒரு பார்ப்பன உபாத்தியாயர் அடே சோமு, அம்பட்டப் பயலே உன் ஜாதிப்புத்தியைக் காட்டுகிறாயே, அடே, கணபதி! செக்கில் மாடு ஓட்டுகிற இடம் என்று நினைத்துக்கொண்டாயா? அடேகமம நாட்டி மகனே பேசாமல்இரு. என்று அதட்டிவிட்டு தன் சக பார்ப்பன உபாத்தியாயரைப்பார்த்து "பார்த்தீர்களா, அந்த இரண்டு பையன்களையும்" என்றார். அவர் மிகவும் தாழ்மையாக 'ஜாதிக்கு ஏற்ற புத்தியும் மூளையும்தானே பார்த்தீர்களா அந்த இரண்டு பையன்களையும் மூன்று பெஞ்சுகளை விட்டு, சார் தயவுசெய்து அவனை தனியாக உட்கார வையுங்கோ, என்று, ஸ்கேவெஞ்சர் ஜாதி பாருங்க" என்றார் அப்பார்ப்பனர் அப்படியே தனியாக உட்கார வைத்தார். டிவிஷன் கவுன்சிலரும் வந்தார். எல்லாம் வழங்கினார், சென்றுவிட்டார். இதில் நிடுக்கிடக்கூடிய சம்பவம் மூன்று மிகவும் முக்கியமானது எது எனில் ஒரு உபாத்தியாயர் தாழ்வாரத்தில் நின்று கொண்டு "குடி அரசு" வை வாசித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்தவுடன் ஒரு பார்ப்பன ஆசிரியன் 'ஐயா முதலியாரே என் ஐயா முதலியாரே, என் அந்தப்பயலின் பேப்பரை வாசிக்கிறீர்கள், அதைக் கிழித்தெறியுமய்யா, அது அயோக்கியப் பேர்வழிப் பேப்பராயிற்றே' என்று வெடுக்கென்று பிடுங்கி எறிந்தார். உடனே அவருக்குக் கோபம்வந்து விட்டது. 'பார்ப்பனர்களுடைய அயோக்கியத்தனத்தை எடுத்து பொது ஜனங்களுக்குக்காட்டினால் அயோக்கியமா' என்று சீறினார். இப்பார்ப்பன ஆசிரியர்களின் அகந்தையை என்னவென்று சொல்வது! பார்ப்பனரல்லாத பொது ஜனங்களுடைய பணத்தை வாங்கி சாப்பிட்டுக்கொண்டு பாடசாலையில் ஜாதி வித்தியாசத்தைக்காட்டி பிள்ளைகளை சூத்திரர்களென்றும், கம்மநாட்டி மக்கள் என்றும், கோட்டி என்றும, அம்பட்டன் என்றும் ஏசி, அநியாயம் செய்வதற்காம்படை பொது ஜனங்களாகிய நாம இப்பார்ப்பன ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். இப்பார்ப்பன ஆசிரியர்களின் அயோக்கியத்தனம கலவி ஆபீஸர் அவர்களுக்கு எட்டுமேல் மிகவும் விசனப்படுவார். அன்னார் பெரிய குடும்பத்தில் உதித்தவர். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்ஸ் முதலிய மேல் நாடுகளுக்கெலாம் சென்று பார்த்தும கற்றும வந்தவர் இவர் இரவும பகலும் ஓயாது ஏழைப்பிள்ளைகளை முன்னேறச்செய்யவும கட்டாய ஆரம்பக் கல்வியைப் பரப் வும பாடுபடுபவர் அவர் செய்துள்ள நன்மைகள் அநந்தயக்கம். ஸ்ரீமான்கள் ஏ. ராமஸ்வாமி முதலியார் பனகல் ராஜா, முதலிய தலைவர்களால நன்கு மதிக்கப்பெற்றவர் என் சென்னைக்கலைத் தூலாகவே அன்னாரைப் புகழ்கிறது. அன்னார் இவ் விஷயங்களை கவனிக்கு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேரில் பார்த்த பேட்டை வாசி.

3-ம் பக்கத் தொடர்ச்சி

சிருதபாஷை தேவபாஷையாக விருக்கட்டும். தேவன் வாயிலிருந்து வந்ததாகவே இருக்கட்டும், அதைப்பற்றின விவகாரம் வேண்டுவதில்லை. பிரத்தியட்சமாயுள்ள கெடுதல்களை எடுத்துக்கண் முன் காண்பித்தாலும் இந்த சாஸ்திரங்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள போதுமான சமஸ்கிருத ஞானமில்லை என்று சொல்லுகிறார்கள். மற்ற யாராவது சமஸ்கிருதம் படித்து இது சாஸ்திரம் என்று வாயில் முன் சொல்லுவதற்கே அதிகாரம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். மகமது நபி நாயகமவர்கள் அரபி பாஷையில் "கொரான்" சொன்னார் அரபு தேசத்தில் பிறக்காதவர்களும் 'கொரான்' படித்து உண்மை முஸ்லீம்களாய் 'கொரானின்' அர்த்தம் தெரிந்து நபி நாயகத்தின் சிஷ்யர்களாய் இருக்கவில்லையா? யேசு கிருஸ்து அவர்கள் 'பைபிளை' பிரஞ்சு, ஜெர்மென், இங்கிலீஷிலுமா சொன்னார்? பௌத்தர் 'புத்த மதத்தை சினா, பர்மிய சிங்கள பாஷைகளிலா சொன்னார்? அவர்கள் கண்ட உண்மைகளை அந்தந்த விடத்து பாஷைகளில் சொன்னார்கள், உலகத்திலுள்ள மதங்களும் தன் ஆசாரியர்களும் எந்த பாஷையில் சொல்லியிருந்தாலும் அந்த பாஷை தெரியாதவர்களாயிருந்தாலும் அந்தந்த மதஸ்தர்களுக்கு அர்த்தமாகிறது நம் மதமும் சர்வ சக்தியாக நம் மதத்திலேயே இருந்தாலும் நடக்க அர்த்தமாகாதாம். இந்த அர்த்தமாகாததும், அர்த்தம் பண்ணிக்கொள்ளக்கூடாததும், அர்த்தம் பண்ணிக்கொண்டாலும் பாவம் வரும்படியான ஒரு மதம் இருந்து கொண்டு மனிதனை மனிதன் அடிமை கொள்வதை விட ஒழிந்து போவது மேல் என்று சொல்லுவதில் என்ன பாவம்? சூரிய வெளிச்சத்தினாலேயே எல்லாவித இயந்திரங்களையும் ஓட்டலாம் என்று எடிசன் மூலமாக அமெரிக்கா பாஷை சொல்லுகிறது மற்றெல்லா பாஷைக்காரர்களுக்கும் அது அர்த்தமுமாகிறது அமெரிக்கா தேசத்து பேசும் இயந்திரம் பேச்சைப் பரப்பு மியந்திரம் அவை அந்த பேசுவதிலும் பரப்புவதிலும் எல்லா தேசத்திற்கும் நமக்கும் அர்த்தமாகிறது. இயந்திரம் சடபதார்த்தம். அது அந்த சொல்லுவது போலவே இங்கும் அர்த்தமாகிறது. நம் சாஸ்திரிகள் ஜடத்தோடு கூடின சித்தத்தன்மையுமுடையவர்கள். இவர்கள் இயந்திரமான சாஸ்திரங்கள் எத்தனை ஆயிர வருடம் நாம் படித்தாலும் அர்த்தமாவதில்லையாம். இதற்குக் காரணமென்ன? இயந்திரத்தினிடத்தில் தந்திரிய வஞ்சனையில்லை. சாஸ்திர இயந்திரம் பண்டிதர்களின் பாட்டைத் தங்கள் உதவியில்லாமற் போனால் தங்கள் வஞ்சனையை வெளிப்பட்டு விடுமோ என்றும், அதி ஜாக்கிரதையினால்தான் போதுமான சமஸ்கிருத ஞானம் இல்லையென்று சொல்லி விடுவதும், பாப்பான் தவிர வேறு யாருக்கும் அர்த்தமாகாது என்று பண்டிதர்கள் சொல்லும் சமஸ்கிருத பாஷை அநேக ஆயிரம் வருடங்களாக சூரியனை வணங்கி வருகிறது. சூரியனால் இயற்கையாக உலகத்தில் உண்டாகும் நன்மையைத் தவிர வேறொன்றும் காணவில்லை. அமெரிக்கா பாஷை சூரியனுக்கு மந்திரம் சொன்னதில்லை. அமெரிக்கா பாஷையின் மூலமாக உலகத்திலுள்ள எல்லா பாஷைகளும் இயந்திரங்களை ஓட்டிக்கொள்ள சூரியன் சக்தியைத் துணையாகக் கொண்டு உதவி செய்வதாக முன்வந்திருக்கிறது. சூரியன் க்ஷத்திரிய ஜாதி யென்றும் சில காலம் குரங்கு ஜாதியாக இருந்தானென்றும் ராமாயணம் படித்தவர்களுக்குத் தெரியும். இதனால் தானோ சூரியனுக்குக்கூட சமஸ்கிருத பாஷை அர்த்தமாகவில்லை போலும். சூரியன் அநுமானனை குரங்கிற்கு வியாகரணம் சொல்லி வைத்ததைக் கவனிக்கையில் சாஸ்திரிகளின் சமஸ்கிருதபாஷை சூரியனிடத்திலில்லை என்றும் சொல்லலாம். இங்கிலீஷ் பாஷை எல்லா உலகத்தையும் ஆளுகிறது. அமெரிக்கா பாஷை தன்னைவிட பெரிதில்லை என்று தீர்மானம் செய்கிறது. ஜப்பான் பாஷை மனிதனோடு மனிதனாய் உட்கார்ந்து கொண்டது. அயர்லாண்டு பாஷை தன்னையே ராஜாவாக்கிக் கொள்ளுகிறது. துருக்கபாஷை ஆடின சிம்மாசனத்தை அசையாமல் செய்து விட்டது. எஜிப்ட் பாஷை அரசன் சிம்மாசனத்தின் அருகில் போய் விட்டது. சைனா பாஷை தத்திக் குதித்துத் தலை எடுக்கப் பறப்பட்டிருக்கிறது. நம் "சமஸ்கிருத பாஷை" தன் வயிறுவளர்க்கவும் அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைத் தேடவும் இழிவான சிந்தனையே தொழிலாகக் கொண்டு திரியும் ஒருவன்மேல் மற்றவன் தொட்டால் தீட்டுவந்துவிடுமென்று நினைத்துக்கொண்டிருப்பதை நீக்கினால் பாவம் வந்து விடுமோ விடாதோ என்று பார்த்துக்கொண்டிருக்கிறது.

---

"அறிவு விளக்கம்."
ஓர் மாதாந்திரப் பத்திரிகை
வருடசந்தா தபாற்கூலி உள்பட 6 அணா
மாதிரிப் பிரதி இனாம்.
"அறிவு விளக்கம்" ஆபீஸ்.
உடுமலைப்பேட்டை.

THE
கும்பகோணம் இண்டஸ்ட்ரியல் கம்பெனி Ltd.

ரைஸ்மில்கள், ஆயில் இஞ்சின்கள், மோட்டார் இஞ்சின்கள் முதலிய இயந்திரங்களுக்கு வேண்டிய சாமான்கள், பேரிங்குகள் முதலானவைகள் இரும்பு, பித்தளை, கன்மெடல், தண்டவாளம், ஒயிட்மெடல் முதலிய லோகங்களில் வார்த்தும், கடைந்தும் ரிப்பேர் செய்தும் கரும்பாலை, ரைஸ்மில் சிலிண்டர், காப்பிங் பிரஸ முதலிய சாமான்கள் புதியதாகச் செய்தும் கொடுக்கப்படும்.

ஆர்டர்கள் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு செய்து கொடுக்கப்படும்.

P. கோவிந்த பிள்ளை மானேஜிங் டைரெக்டர்.
கும்பகோணம் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட், கும்பகோணம்.

# மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம், பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும் உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும கைகண்ட மருந்து

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே, தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்





பழநி சி. எம. சாமி.

# குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25 எழைகளுக்குப்பாதிவிலை

இனுமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணு ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானன் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானன் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்னுப்பக் கோருகிறேன்.

A M துரைசாமி, 80-நிர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சிசத ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S.I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை


## பிராமணீயம் ஒழிந்தது.

சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி தாலூகா மத்தூர் கிராமத்தில் வைசிய ஜாதியில் அப்பாசாமி செட்டியார குமாரன் மாணிக்கம் செட்டியார் தன் தகப்பனர் காலஞ் சென்ற அப்பாசாமி செட்டியாருடைய 6-வது வருடதிதியை பார்ப்பன புரோகிதத்தை நீக்கி தன் சொந்தக்காரர்களுக்கும் ஏழை மக்களுக்கும அன்னமளித்து முடித்தார் என்று திரு ராஜா கிருஷ்ண செட்டியார் எழுதுகிறார்.

## இலங்கை மருத்துவகுல சங்கத்தின் பொதுக் கூட்டம்.

சென்ற 3-10-27 திங்களன்று மாலை 7 மணியளவில் கும்பனித்தெரு திரு கணபதி பிள்ளையவர்களில்லத்தில் மேடி சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கனம் அட்வகேட் எம். எ. அருளானந்தமவர்கள் தலைமை வகித்தார்கள். மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதைப்பற்றியும், அது சமயம் அடிகளுக்கு பணமுடிப்பு அளிக்க வேண்டுமென்றும் உபந்நியாசித்தார்கள். பணமுடிப்புக்கு வசூல் செய்ய தனிக்கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டது. பின்னர் கல்வியைப்பற்றியும், ஒற்றுமையைப்பற்றியும், மருத்துவர்களின் மானிய நிலவிஷயமாய் நடந்த கேசை அப்பீல் செய்ய சங்கம் தாராளமாய் உதவிசெய்ய வேண்டுமென்றும பேசினர்கள். கடவுள் வணக்கத்திற்குப்பின் சிற்றுண்டி வழங்கப்பெற்று கூட்டம கலைந்ததென்று சுப்பிரமணியம் எழுதுகிறார்.

## ஸ்ரீமத் ஞானியார் ஆச்சிரமம்.

மணம் பூண்டி, திருக்கோவிலூர்.

அன்புடையீர்,

நமது குலப் பெரியார் உயர் திரு ம. ரா. குமார சுவாமியார் இப்பெரிய ஆச்சிரமம் ஒன்று நிறுவியுள்ளார்கள். அதன் சார்பில் புத்தக, வாசக, பிரார்த்தனு சாலைகளையும் தொடங்கியுள்ளார்கள் சொற்பொழிவுக் கழகம் ஒன்று தோற்றுவிக்கவும, பத்திரிகை ஒன்று நடாத்தவும் முயற்சி செய்யப் பெறுகிறது பொதுவாக நமது குல முன்னேற்றத்திற்கும், சிறப்பாக நமது இளைஞர் இயக்கத்திற்கும் இவ்வாச்சிரமத்தின் மூலம் ஆக்கந்தேடலாகும். குல நலத்தின் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும ஆச்சிரம நிதிக்கு பணத்தை மணமபூண்டிக்கு மணியார்டர் மூலம அனுப்புவீர்களாக எதிர்பார்க்கிறோம்.

## மாகாணப் பார்க்கவகுல இளைஞர் கூட்டம்.

விபவ ஆண்டு சித்திரைத் திங்களில் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெஞ்ஞான சிவாசாரிய சுவாமி யவர்களின் தலைமையின் கீழ் வித்வமணிகள பலரது சொற்பொழிவுகட்கிடையே ஆச்சிரமதிறப்பு விழா நடைபெறும. இரண்டாம நாளும். மூன்றாம் நாளும் பார்க்கவகுல இளைஞர் மகா நாடும் கூட்ட எண்ணியுள்ளோம் இது குறித்த விவரமறிய விழைவோர் திருவாளர் ப. நாராயணசாமி உடையார், வில்வாரய நல்லூர், குமபகோணம என்ற விலாசதாருக்கு எழுத வேண்டுகிறோம்.

தங்கள் ஊழியர்கள்,

மா. ர, வேங்கிடாசல உடையார்,
மிட்டாதார, மாரண்டஅள்ளி, சேலம்.

மே வே, துரைசாமி உடையார்,
"தெய்வீகன்" ஆசிரியர், பொன்மலை,
திருச்சி.

## கட்டி வெள்ளி நகைகள்

தீபாவளி! பண்டிகை தீபாவளி!!

### வெள்ளி நகைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரணாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும் இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைறாக்களும் அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 நெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம் வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

சருப் & ஜவுளி வியாபாரம

குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் } "சராப்" சேலம் }



## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விஷயம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு



## கதரன்பர்களுக்கு

### வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா, அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனாவது அணியவேண்டும் நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள் இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்

M. V. கருப்பண்ணசெட்டியார்,

திருப்பூர்,

(தென் இந்தியா.



## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சிரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர்குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ. 4 வி. பி. வேறு கேட்லாக் இனம்.

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனம் விலை ரூ. 2. வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.



அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—


| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட்கார்சரி தோட்டம். சேலம்.



## பெட்ரோமாக்ஸ் லைட்.



லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனம்

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



## கதர் வேண்டுமா?

சர்க்கா சங்க அத்தாட்சி பெற்ற சுத்தக்கதர் தமிழ் நாட்டுத் தலைவர்கள் நாயக்கர் நாயுடு அவர்களால் ஆதரிக்கப்பெறும்

லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை

தயாரிக்கும் கதரையே

பிராமணரல்லாதார்களே ஆதரியுங்கள்.

பிராமணரல்லாதார் முதலைக்கொண்டு முயற்சியைக்கொண்டு அவர்கள் நன்மைக்காக உழைப்பது.

உடனே முன் பணத்துடன் ஆர்டர் செய்யுங்கள்.

தபால், ரயில், கப்பல் மூலம், நிடம் சரக்கு, நியாயமான விலைக்கு அனுப்பிவைக்கப்பெறும்.

விலாசம் :—


லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை,

(ஸ்டோர்) ஈரோடு.



முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த வேஷம் வேணுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால தங்க ஆபரணம் போல் இருக்கும ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. எழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.


## "குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்தவேணுமாய்க் கேட்டுக கொள்ளுகிறோம. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா மானேஜர்,

"குடி அரசு"

நீலமேக ராகவமாளவாசனால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது